Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valamparii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி 31 செய்வாய்க்கிழமை (16.08.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 240

ராம்கோ

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

சீமெந்து

# இவ் வருடமே ஜனாதிபதித்தேர்தல்

## தேர்தல் ஆணையாளர் நீதிமன்றத்திற்கு அறிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடமே நடைபெறவுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா பதவிப்பிரமாணம் செய்த 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதியை அடிப்படையாகக் கொண்டு அதன் பிரகாரம் இவ்வருடத்திலேயே ஜனாதிபதித்தேர்தலை நடத்த முடியுமெனவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.**

இவ் ஆண்டு இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்த உத்தரவிடுமாறு கோரி ஜாதிக ஹெல உறுமய செய்த அடிப்படை மனு பற்றிய தனது கருத்துக்களை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் சமர்ப்பித்தார்.

இதனடிப்படையில் அரசியலமைப்பின் விதிமுறைகளுக்கு ஏற்ப ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு மாதகாலத்திற்கு குறையாமலும் இரண்டு மாத காலத்திற்கு கூடாமலும் குறிப்பிட்டகாலத்தில் புதிய முறையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கையெடுக்கும்.

தேர்தல் திணைக்களத்தினால் வேட்பு மனு கோரப்பட்டு நாலு வாரங்களுக்கு குறையாமலும் 6 வாரங்களுக்கு கூடாமலுமான காலகட்டத்தில் ஜனாதிபதித்தேர்தலை நடாத்துவதற்கான திகதி அறிவிக்கப்படும்.

ஜனாதிபதிச் சட்டம் மற்றும் அரசியல் அமைப்பின் விதிமுறைகளுக்கு ஏற்ப ஜனாதிபதித் தேர்தலினை நடத்தும் நாள், அதற்கான வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான தினம் என்பவற்றை குறிப்பிடும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இருக்கின்றது.

அதற்கேற்ப அடுத்த ஜனாதிபதித்தேர்தலுக்குக்கான விசேட உத்தியோக பூர்வ அறிவித்தலை வர்த்தமானி மூலம் அறிவிக்க விருப்பதாக தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-4)

## வெளியுறவுத்துறை அமைச்சர் பதவியை ஆனந்தசங்கரிக்கு வழுங்க நடவடிக்கை?

### கொழும்பில் ஊகம்

(கொழும்பு)

வெளியுறவுத்துறை அமைச்சர் பதவிக்கு தெரிவுசெய்யப்படக்கூடியவர்கள் பற்றி கொழும்பில் ஊகங்கள் கிளம்பியுள்ளன.

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால மற்றும் ஆனந்தசங்கரி ஆகியோரின் பெயர்களே பிரஸ்தாபிக்கப்பட்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விருவரினதும் பெயர்களே ஜனாதிபதியால் பிரஸ்தாபிக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது. இவர்கள் இருவரும் வெளியுறவுத்துறை அமைச்சர் பதவிக்கு பொருத்தமானவர்களென (12ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று இளைஞர்கள் குருநகரில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் இறங்கு துறையில் ஆபத்தினை விளைவிக்கும் வெடிபொருட்களினை வைத்திருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட மூன்று மீனவர்கள் கடற்படையினரால் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று மாலை இவர்கள் மூவரும் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட வேளையில் அவர்களில் றெஜினோல்ட் ஜுட் நிக்ஷன் என்ற நபரை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் ரி.விக்கினராஜா உத்தரவிட்டார்.

அத்துடன் மற்ற இருவரையும் 25 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். மணற் திட்டி ஒன்றில் கைவிடப்பட்ட நிலையில் (12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கதிர்காமரின் உடல் சங்கமமானது

### இறுதி நிகழ்வில் பெருமளவானோர் பங்கேற்பு



(கொழும்பு)

காலஞ்சென்ற வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிக்கிரியைகள் நேற்று பூரண அரச மரியாதையுடன் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றன.

கொழும்பு விஜயராம மாவத்தையில் உள்ள அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் இருந்து பிற்பகல் 3.30 மணியளவில் பூதவுடலை சுதந்திர சதுக்கத்திற்கு கொண்டு செல்வதற்கான இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியது.

அமைச்சரின் பூதவுடலுக்கு இறுதிமரியாதை செலுத்துவதற்கு நேற்று பகல் வரை பொதுமக்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. நேற்று பிற்பகல் 2 மணிவரை இறுதிமரியாதை செலுத்துவதற்கான சந்தர்ப்பம் இருந்தவேளையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்ஸன், பிரதியமைச்சர் விடார்ஹெல்கீசன் உட்பட வெளிநாட்டு இராஜ (12ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க் கட்சித்தலைவர் ரணில் இந்தியா பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று இந்தியாவிற்கான விஜயம் ஒன்றினைமேற்கொள்ளவுள்ளார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரகுமார் குஜ்ராலின் அழைப்பினை ஏற்றே அவர் அங்கு செல்கின்றார். புதுடில்லியில் நடைபெறவுள்ள தெற்காசிய ஒத்துழைப்பிற்கான இந்தியக் கவுன்சிலின் மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றவுள்ளார்.

தெற்காசியாவின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் எதிர்காலத்தில் வலய ஒத்துழைப்பிற்கான வளைந்து கொடுக்கும் தன்மை என்ற தொனிப்பொருளில் எதிர்க்கட்சித்தலைவர் உரையாற்றவுள்ளார்.

இவ்விஜயத்தின் போது புதுடில்லியில் அரசியல் தலைவர்களையும் சந்தித்து இலங்கையின் நிலைப்பாடுகள் குறித்து பேச்சுவார்த்தைநடத்தவுள்ளார். அத்துடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விளக்கங்களையும் அவர் பெற்றுக்கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-4)

## விசாரணைக் குழுக்கள் உடனடியாக வடக்குக் கிழக்கிற்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய தகவல்களை அறிவதற்காக இராணுவம் மற்றும் உயர் பொலிஸ் புலனாய்வுக் குழுக்கள் வடக்கு மற்றும் கிழக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அரசகட்டுப்பாடற்ற பகுதிகள் உட்பட பல இடங்களிலும் தகவல்களைத் திரட்டவுள்ளனர். இந்த புலனாய்வுக் குழுக்கள் நேற்று. முன்தினம் காலை கொழும்பில் இருந்துபுறப்பட்டுள்ளனர். (12ஆம்பக்கம்பார்க்க)

## அமைச்சர் அதாவுல்லாவுக்கு எதிராக பொத்துவிலில் நேற்றுக் ஹர்த்தால்

(பொத்துவில்)

பொத்துவில் நகரில் நேற்றுக்ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அமைச்சர் அதாவுல்லா பொத்துவில் பிரதேசத்திற்கு விஜயம் செய்ததை எதிர்த்தே இக்ஹர்த்தால் நடத்தப்பட்டது.

கிழக்கு அபிவிருத்தி உட்கட்டமைப்பு அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா அடிக்கல் நாட்டுகை ஒன்றில் கலந்துகொள்வதற்காக நேற்று பொத்துவில் மத்திய கல்லூரிக்குச் செல்லவிருந்தார்.

அவருடைய வருகையை ரத்துச்செய்யுமாறு கோரி மாபெரும் (12ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 0777-2349

011-2372952-3, 011-2360290, 011 - 2360291

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


# விழிப்பின் பதிவுகள்

வலம்புரி

## இன்றைய அரசியல் சூழல் சமாதானத்திற்கு சாதகமானதா

தற்போதைய அசியல் சூழலானது பல்வேறுபட்ட அரசியல் முரண்பாடுகளையும் இனத்துவ சமூக சிக்கல்களையும் கொண்டதாக காணப்படுகிறது. 2002 பெப்ரவரி 22 ம் திகதி கைச்சாத்திடப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற புரிந்துணர்வு உடன்படிக்கை, சமாதான நடவடிக்கைகள் என்பன பொதுமக்களது பெரும் எதிர்பார்ப்பை கிளறியபடி முன்னேறியது. எனினும் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்களின் சில தவறான நகர்வுகள் பேச்சுக்களை முடக்கின என்று கூறலாம். குறிப்பாக புலிகளை தடை செய்துள்ள ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் ஒரு முன் கூட்டத்தொடரினை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் ஒத்துக் கொண்டமையானது அல்லது ஏற்பாடு செய்துகொண்டமையானது மிகப் பெரிய தவறாக அமைந்தது. இது தொடர்ந்து வந்த சமாதான பேச்சுவார்த்தைகளை ஸ்தம்பிதமடையச் செய்தன எனலாம். இது ஒருபுறமிருக்க வடகிழக்கை புனரமைப்பதற்கான ஒரு அலகாக கொள்ளப்பட்ட சிறான் அமைப்பு தனது பெயர்ப்பலகையை நிறுவியதுடன் மாத்திரம் நின்றுவிட்டது. எவ்வாறாயினும் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கென நெருங்கி வந்த வாய்ப்புகள் காலங்காலமாகவே கைநழுவிப்போன ஏராளமான சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்றாக அமைந்தது.

இது ஒருபுறமிருக்க விடுதலைப்புலிகள்



இடைக்கால சபை ஒன்றை கோருவதற்குரிய வாய்ப்புக்களை அளித்தது. இந்த நிலையில் இந்த இடைக்கால நிர்வாக சபை விடுதலைப்புலிகளுக்கு ஈழத்தை வழங்கப் போவதாக தெற்கில் பெரும் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் புலி பூச்சாண்டி காட்டி அமுக்கப்பட்டது. எனினும் பதவிக்கு வந்த கூட்டமைப்பு அரசாங்கத்தினால் சமாதான நடவடிக்கைகளில் எந்தவித உருப்படியான நகர்வுகளையும் மேற்கொள்ள முடியாமல் போய்விட்டது. இவ்வாறு சமாதானப் படகு தத்தளித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தமானது நிலைமையை சற்று ஆறப்போட்டது. குறிப்பாக செய்வதறியாது திகைத்துப் போயிருந்த கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு சுனாமி ஒரு பெரும் அரசியல் கொடையாக வர்ணிக்கப்பட்டது. எனினும் நிலைமை அவ்வாறாக நீடிக்கவில்லை. காரணம், வடகிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக விடுதலைப் புலிகளுடன் இணைந்து சுனாமி பொதுகட்டமைப்பு ஒன்றை நிறுவ வேண்டிய அவசியமும், நிர்ப்பந்தமும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இது அதனது உடைவிற்கு காரணமாக அமைந்தது. இந்த நிலையில் அடுத்ததாக ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சர்ச்சைகள் எழுந்தன. இந்த சர்ச்சையும் கூட கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு பாதகமாக அமைந்தது. ஆயினும் இவ்வருடமே

- என்.ஜீவேந்திரன்

ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் தேவையானது அரசாங்கத்தினை பெரும் சிக்கலில் வீழ்த்தியுள்ளது.

இவ்வருடமே தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பது சட்டபூர்வமானது என்ற கருத்தையே தேர்தல் ஆணையாளர் திணைக்களம் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் அவ்வாறான முடிவு எடுக்கப்படுமானால் அது பக்கசார்பான முடிவாக அமையும் என சிறி லங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது. இதேவேளை ஜனாதிபதியும் ஜனாதிபதி தேர்தல்நடாத்தும் காலம் தொடர்பான ஆட்சேபனைகளை தெரிவித்து உயர் நீதிமன்றத்திற்கு கடிதம் ஒன்றினை அனுப்பியதும் நீதித்துறையும் சிக்கலில் சிக்கியது.

இவ்வாறான பல்வேறுபட்ட சிக்கல்கள் சமாதான நடவடிக்கைகளை மேகம் போல மறைத்து நிற்கின்றன. ஜனாதிபதி தேர்தல் மூலம் தடைப்பட்டு இருக்கின்ற சமாதான பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கைகள் வெறும் நம்பிக்கைகள் மட்டுமே. ஏனெனில் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான எவ்வித வேலைத் திட்டங்களும் இல்லாத அரசியல் நகர்வுகளால் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட போவதில்லை. ஏனெனில் ஒரு குறித்த காலத்தில் பதவிவகித்த இரு பிரதான கட்சிகளினது நடவடிக்கைகளும் இதனை சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. எனவே உண்மையான அர்ப்பணிப்புடனும், தூரநோக்குடனும் மேற்கொள்ளப்படுகின்ற அரசியல் நகர்வுகள் மாத்திரமே சமாதானத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். எனவே தற்போது உள்ள சுயநலம், அதிகார வெறிபிடித்த அரசியல் சூழல் ஒரு போதும் நிரந்தர சமாதானத்திற்கான வாய்ப்பை வழங்கப்போவதில்லை.

### இவ்வார விழிப்பில்...


- சமாதான முன்னெடுப்புக்களும் ஜனாதிபதி தேர்தலும்
- தலவாக்கலை இளைஞர்கள்
- சுதந்திரத்திற்கான சமாதானம்
- ஒற்றுமைக்காக ஒன்றுகூடும் இளைஞர்கள்
- யாழ் உணவும் தென்னிலங்கையரும்


### சிந்தனைக்கு

சகல காரியங்களுக்கும் -
இன்பத்திற்கும்,
துன்பத்திற்கும்,
நன்மைக்கும், தீமைக்கும்,
இருட்டுக்கும்,
வெளிச்சத்திற்கும்,
பாவத்திற்கும்,
புண்ணியத்திற்கும்,
அன்புக்கும்,
வெறுப்புக்கும் மனமே
காரணம்.

## மலையக இளையவர்களுக்கு விடிவு எப்போது

மலையக சமூகம், 1828 ம் ஆண்டு இலங்கைக்கு ஆங்கிலேயரால் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சமூகம். இவர்கள் இலங்கையில் குடியமர்ந்து 177 வருடங்களாகின்ற நிலையில் இன்னும் இம்மக்கள் இலங்கையர் என்ற அந்தஸ்த்துடன் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். இந்நிலையில் இன்றைய மலையக இளைஞர்களை இது பாரியளவில் பாதிக்கிறது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயம்.

பல தடைகளையும் தாண்டி ஏனைய சமூகத்துடன் தாமும் முன்நிற்க வேண்டும் என்ற ஆர்வத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கல்வி கற்கும் மலையக் இளைஞர்கள் படிப்பை முடித்து வேலைவாய்ப்பு என்ற அடுத்த நிலைக்கு வரும்போது அவர்களது நிலை மிகவும் கவலைக்குரியதே. காரணம், புறக்கணிப்பு.

புறக்கணிப்பு என்பது தமிழர்களின் வாழ்வில் மிகவும் சாதாரண விடயம். எமது நாட்டின் இனப்பிரச்சனைக்கு அடித்தளமாக அமைந்த, இன்றுவரை தீராத பிரச்சனையாகவுள்ள மொழிப்புறக்கணிப்பு மலையக இளைஞர்களையும் விட்டு வைக்கவில்லை. இந்த மொழிப்பிரச்சனை ஒருபுறமிருக்க வேலைவாய்ப்பு என்று கொழும்பு போன்ற பகுதிகளுக்கு வரும் போது நகர்ப்புறங்களில் கல்வி கற்று, ஆங்கில, மேலதிக, விசேட தகமைகளைப்பெற்று வரும் இளைஞர்களுடன் போட்டியிட்டு வேலைகளைப் பெறுவதில் பெரும் நெருக்கடிகளை மலையக இளைஞர்கள் எதிர்நோக்குகின்றனர். இந்த நிலையில் மலையகத்தில் தற்போது சாதாரணதரம், உயர்தரம் படித்துவிட்டு அதற்கேற்ற வேலைவாய்ப்பு இன்மை காரணமாகவும், தம் பெற்றோரை போன்று தோட்ட வேலைகளுக்குச் செல்ல விருப்பமின்மை காரணமாகவும் பெரும்பாலான இளைஞர்கள் வீட்டிலேயே இருக்கும் புதிய பண்பாடு மலையகத்தில் உருவாகிவருகிறது. இது இவ்வாறிருக்க உயர்தரம் வரை படித்து விட்டு அல்லது கல்வியை இடைநடுவில் நிறுத்திவிட்டு தோட்ட வேலைகளுக்கே செல்லும் சந்தர்ப்பங்களும் நிறைய உண்டு. அதிலும் குறிப்பாக சிறுவயதில் நகர்ப்புறங்களில் வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்படும் சிறுவர்களின் எதிர்காலமோ பரிதாபத்திற்குரியதாகும். குறிப்பாக பணக்காரர்களது வீடுகளில் வேலைக்காரர்களாக மலையகத்தைச் சேர்ந்த சிறுவர்,சிறுமியர்களும், இளைஞர், யுவதிகளும் காலம் காலமாக வேலைக்கமர்த்தப்படுவது எழுதப்படாத விதியாக இருக்கிறது. 18 வயதிலும் குறைந்தவர்களை வேலைக்கமர்த்தும் இந்த சட்டவிரோத செயலினை சகல இனத்தைச் சேர்ந்த தனவந்தர்களும் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், இதற்கு எதிரான எந்த சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை. இதற்கும் மேலாக வேலைக்கமர்த்தப்படுகின்ற மலையக சிறார்கள் கொடூர சித்திரவதைகளுக்கு உள்ளாவது தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. அதேபோல, பெண்பிள்ளைகள் பாலியல் சித்திரவதைகள், வன்புணர்வு போன்றவற்றுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

- ஜீ.யோகப்பிரியா

அதில் பலர் கர்ப்பிணிகளாக மலையகம் திரும்புகின்றனர். இன்னும் சிலர் கருக்கலைப்பிற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதைப்போலவே தற்போது அம்மலையக சிறார்களது சிறுநீரகம் போன்ற உடற்பாகங்கள் பெறுவதற்காக கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. எனவே உடனடியாக மலையக அரசியல்வாதிகளும், மலையக புத்திஜீவிகளும், மலையக அமைப்புகளும் மலையகத்திற்கு கறையாக இருக்கின்ற இந்த பிரச்சனைகளை தடுத்து நிறுத்த முன்வரவேண்டும்.


## மாணவ சமுதாயத்தின் எதிர்காலம்...

தமிழ் மாணவர்கள் பல பிரச்சனைக்கு முகம் கொடுத்த போதும் தமது கல்வியை தொடர்ந்ததுடன் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். யுத்த காலத்தின் போதும் கூட துணிந்து கல்வி பயின்ற இவர்கள் இன்று பாடசாலை செல்வதற்கே அச்சப்படுகின்றனர். இதற்கு கடந்த சில வாரங்களுக்கு முன் நடந்த சம்பவம் ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது. அண்மையில் கொழும்பிலுள்ள பிரபல ஆண்கள் தமிழ் பாடசாலை மாணவர்களுக்கும், ஏனைய மூன்று பாடசாலை மாணவர்களுக்கும் இடையில் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் தமிழ் மாணவர்கள் பலரை கைது செய்ததுடன் பெற்றோர், அதிபர் ஆகியோரின் தலையீட்டினால் அவர்களை விடுதலை செய்தனர்.

இந்த இறுக்கமான சூழலுக்கு தனியார் வகுப்பொன்றின்போது இருவேறு இன மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறே மறுநாள் பாடசாலைகளுக்கிடையிலான தகராறாக மாறியது. இந்த மாணவர்களுக்கிடையிலான சண்டையில் இனவாதம் கலக்க செய்யும் வகையில் சில கும்பல்கள் ஈடுபட்டன. இதற்கு பொலிஸாரின் மறைமுக ஆதரவும் இருந்தது என தமிழ் மக்கள் ஆதங்கப்படுகின்றனர். அத்தோடு வீதியின் அருகில் இருந்த ஆட்டோக்காரரர்கள் தமிழ் மாணவர்கள் பலரை பலவந்தமாக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தாக தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் படித்து உயர்ந்த நிலைக்கு வரவேண்டும் என்ற கனவுகளோடு, பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைக்கின்றனர். ஆனால் மாணவர்களோ பிரச்சனைகளை உருவாக்குவதால் அவர்களின் கனவுகள் பகல் கனவாகிவிடும் வாய்ப்புள்ளது. மேலும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி மனநிம்மதியுடன் இருந்த பெற்றோர் இனி வரும் காலத்தில் அந்த நிம்மதிக்கும் பங்கம் வந்து விட்டதே என்று அச்சப்படும் நிலையே தோன்றியுள்ளது.

பாடசாலை மாணவர்கள் குறிப்பாக கொழும்பில் கல்வி பயிலும் மாணவர்கள் தமக்கு என்று ஒரு குழுவை



ஏற்படுத்தியுள்ளனர். இதனால் இந்த குழுக்களைச் சேர்ந்த மாணவர்களில் யாரேனும் ஒருவருக்கு சிறுபிரச்சனை என்றாலும் உடனடியாக அக்குழுவினர் விரைந்து வந்து தமது கைவரிசையை காட்டுவார்கள்.

இதுவரை காலமாக அரசியல் சாயம் பூசப்படாத இடமாக பாடசாலை மட்டுமே

- எஸ். கிருபாலினி

காணப்பட்டது. இன்று அதற்கும் அரசியல்வாதிகள் குறி வைத்துவிட்டனர். எப்படியாவது பாடசாலைகளிலும் செல்வாக்கு செலுத்த துடித்துக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகளுக்கு இது மிக அருமையான சந்தர்ப்பமாக அமையும். எனவே இந்த சிறு பிரச்சனையை பெரிதாக்கி அதில் குளிர்காயாமல் மாணவர்களது எதிர்கால நலனை கருத்தில் கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும் என்பதே பெற்றோர்களின் வேண்டுகோளாகும்.

அத்தோடு இது போன்ற காரணங்களால் இதுவரை ஏற்பட்ட தடைகளை தாண்டி கற்றுவந்த தமிழ் மாணவர்களது கல்வி செல்வம் பாதிக்கப்படக் கூடாது. எனவே அதிபர், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரும் இணைந்து மாணவ சமூகத்தினருடன் கதைத்து இதற்கு முற்றுப்புள்ளி வைத்தால் இனிவரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் உருவாகாமல் பாதுகாப்பதோடு, கல்வியையும் அரசியலாக்க நினைப்பவர்களுக்கும் இடமளிக்காமல் இருப்பதே மாணவ சமூகத்தின் சிறந்த எதிர்காலத்திற்கு உத்தரவாதமாக அமையும்.

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு **7.30**மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு **7.25** மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மஹோற்சவம் அடுத்த மாதம் 4ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

வேட்டைத்திருவிழா 12ஆம் திகதி திட்கட்கிழமை பிற்பகல் 2.00மணிக்கும், சப்பறத்திருவிழா 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கும், தேர்த்திருவிழா 14ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கும் 15ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் கொடியிறக்கமும், 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர் பொங்கலும் இடம்பெறவுள்ளது.

பூசைகள் யாவும் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7.30 மணிக்கு முடிவடையும். (அ-9)

# தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கின் ஏழாம் நாள் நிகழ்வாக இன்று இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இவ் இசை நிகழ்ச்சியில் பாட்டு வாஸஸ்பதி ரஜீந்திரன், வயலின் பாக்கியலட்சுமி நடராசா, மிருதங்கம் ரி.வரோதயன், கடம் எம்.லோகேந்திரன் ஆகியோர் இசை நிகழ்த்தவுள்ளார்கள்.

(அ-19)

# இலவச பாடநூல்கள் அடுத்த மாதம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

2006ஆம் ஆண்டிற்கான இலவச பாடப் புத்தக விநியோகம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தரம் 1 தொடக்கம் 11வரையிலான வகுப்பு மாணவர்களுக்குத் தேவையான 225 வகையிலான பாடப் புத்தகங்கள் 27கோடி ரூபா செலவில் அச்சிடப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-7)

## இராசி பலன்

**16 .08.2005**
**(ஆடி 31, செவ்வாய்க்கிழமை)**
**ஏகாதசி முற்பகல் 10.02 மணிவரை**
**மூலம் பிற்பகல் 1.50 மணிவரை**
**இராகுகாலம் 3.05 - 4.35 மணிவரை**
**சுபநேரம் 10.35 - 12.05 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | பிரயாணம், எதிர்பாராத செலவு, காரிய தாமதம், சரீரப்பிரயாசை. |
| இடபம் | உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல், போசன சுகம், வாகன பயம். |
| மிதுனம் | நல்ல முயற்சி, தனவருவாய், பெருமையடைதல், விருந்துபசாரம். |
| கடகம் | சத்துரு ஜெயம், எடுத்தகாரியம் கைகூடும், தனவருவாய், பிரயாணம். |
| சிங்கம் | குடும்பக்கவலை, கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், தனவிரயம். |
| கன்னி | மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், தாய் வழிஉறவு, புதிய விடயம். |
| துலாம் | கூட்டுமுயற்சி, தனவருவாய், கீர்த்தி, தொழில் நன்மை. |
| விருச்சிகம் | வேலைச்சுமை, எடுத்தகாரயம் தாமதமாகும், உறவினர் சந்திப்பு, தனவிரயம். |
| தனுசு | புதிய முயற்சி, தேகநலன், பெரியோர் சந்திப்பு, நல்ல செய்தி. |
| மகரம் | அமைதிக்குறைவு, பணவிரயம், பிரயாணம், முயற்சி தாமதம். |
| கும்பம் | காரிய நன்மை, போசனசுகம், உறவினர் வருகை, தனவிரயம். |
| மீனம் | தொழில் மேன்மை, முயற்சி பலிதம், போசனசுகம், அதிகாரம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

# உங்களுக்கு அறிவும் கண்களுக்கு ஒளியும்

***தாய்:** எனது பாடசாலை செல்லும் ஆறு வயது மகன் அடிக்கடி கண்ணை சிமிட்டுவதுடன் கண்களை கசக்கியவாறு இருப்பான். இது ஒரு நோயா?*

**மருத்துவர்:** சாதாரணமாக எங்கள் உதடுகள் காய்ந்தால், நாக்கினால் ஈரப்படுத்துவது போல், எங்கள் கண்ணில் கண்ணீர் குறையும் போது கண்களை சிமிட்டுவோம். சில வேளைகளில் சிறுபிள்ளைகள் மற்றவர்களின் கவனத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் இப்படிச் செய்வார்கள். கடைசியில் இது ஒரு பழக்கமாகிவிடும்.

***தாய்:** சிறுவர்களில் அதிகமானோர் காயப்படுவதனாலேயே குருடாகின்றார்கள் என்று கேள்விப்பட்டுள்ளேன். எங்கள் பிள்ளைகளை இவைகளிலிருந்து பாதுகாப்பதற்கு ஆலோசனை தரவும்.*

**மருத்துவர்:** பெரியவர்களின் கவனம் இல்லாத தன்மையே இதற்குக் காரணம். கூரான ஆயுதங்கள் கண்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். கத்தி, ஈக்கில், அம்பு, பென்சில் போன்ற பொருட்களுடன் உங்கள் குழந்தைகளை விளையாட விடாதீர்கள். கிட்டி அடிப்பது போன்ற விளையாட்டுக்கள் மூலமாகவும் கண்கள் காயப்படலாம்.

***தாய்:** சித்திரை வருடப்புறப்புக்கு முன் "வீடுகளுக்கு பட்டாசு கொண்டு வரவேண்டாம்" என்று வானொலியில் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படும். இந்தப் பட்டாசுகளினால் கண்கள் பாதிப்படையுமா?*

**மருத்துவர்:** புதுவருட காலங்களில் பட்டாசு கொளுத்துவதால், காயப்படும் 20-30வரையிலான பிள்ளைகள் வருடா வருடம வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுகின்றார்கள். பட்டாசு வெடிக்கத் தாமதமாகுவதால் அதைக் கையில் எடுத்துப் பார்க்கும் போது பட்டாசு வெடித்து கண்ணில் படுவதால் கண், முகம், கை, கால் என்பன காயமேற்பட இடமுண்டு. வாழ்க்கை முழுவதுமே குருடாக இருக்க நேரிடுகின்றது.

**ஒரு பாடசாலை மாணவன்:** *சாதாரணமாக ஒவ்வொரு மாதமும் எனக்கு தாங்க முடியாத தலைவலி ஏற்படுகின்றது. தலையின் ஒரு பக்கத்தில் தான் இந்தத் தலைவலி ஏற்படுகின்றது. கை விரல்களால் கண்பகுதிக்கு பக்கத்தல் சற்று அழுத்திவிடும் போது சற்று குறைகின்றது. தலைவலி ஏற்படும்போது மின்னல் போல் ஒளி வந்து பின்னர் இருள் போல் ஏற்படுகின்றது. அவ்வேளையில் வாந்தி வரும்போல் இருக்கின்றது. சாதாரணமாக வாந்தி போனபின் சுகமாகின்றது. இதற்குக் காரணம் கூட படிப்பதனாலா?*

**மருத்துவர்:** இந்த நோய்க்கு ஆங்கிலத்தில் (Migraine) மிக்றெயின் என்று கூறுவார்கள். அதிகம் பேருக்கு உள்ளது. பயப்படத் தேவையில்லை. சாதாரணமாக வைத்தியம் செய்யும் வைத்தியரை நாடி குணமடைய முடியும்.

**20 வயதுடைய ஒரு வங்கி உத்தியோகத்தர்:** *நான் ஒவ்வொரு நாளும் கணனியில் வேலை செய்யும் உத்தியோகத்தர். மாலையில் எனது கண்களுக்கு சரியான சோர்வாக இருக்கின்றது. இவ்வாறு ஏற்படுவது எனது கண்களில் கோளாறு காரணமாகவா?*

**மருத்துவர்:** பொதுவாக கணனியில் வேலை செய்பவர்களில் 40 அங்குல தூரத்தில் தலையையும், கண்களையும் ஒரே நிலையில் வைத்த வண்ணம் வேலை செய்கிறார்கள். அதனால் கண்களைப் போல் தலையின் பிற்பகுதி தசை நார்களிற்கும் சோர்வு ஏற்படுகின்றது. இதற்கு, வேலை செய்யும் போது இடைக்கிடை நாற்காலியின் பின்பக்கமாக சாய்ந்து களைப்பாற வேண்டும். சாதாரணமாக கணனியிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் ஆடுவது போன்ற தன்மை ஏற்படும். இதனால் கண்களுக்கு சோர்வு ஏற்படுகின்றது. இதற்கு கணனியில் இருக்கும் கறுப்புக் கண்ணாடியைப் பாவிக்க வேண்டும். மேலும் கண்களில் குறைபாடு உள்ளதா எனப் பரீட்சித்துப் பார்த்தல் நல்லது.

**20வயதுடைய ஒரு வாலிபன்:** *எனது கிராமம் பொலன்னறுவ. இரண்டு வாரங்களாக எனது இடது கண்ணின் முன்பாக கறுப்பு துண்டுகள் மிதப்பது போல் இருக்கின்றது. பார்வையும் குறைவாக இருக்கின்றது.*

**மருத்துவர்:** இது படிப்படியாக கண்ணைக் குருடாக்கும் ஒரு நோய். சரியான முறையில் மருத்துவம் செய்ய வேண்டும். குணமாக்க நீண்டகாலம் எடுக்கும். இந்த நோய் கூடுதலாக ஏற்படுவது வறட்சியான பிரதேசங்களில் வயல் வேலை செய்யும் வாலிபர்களுக்கே. நோய் ஒரு கண்ணிற்கோ, இரு கண்களிற்குமோ ஏற்பட வாய்ப்புண்டு.

**30 வயதான ஒரு விவசாயி:** *ஒரு மாதத்திற்கு முன்பாக எனது கண்களிற்குள் சேறுபட்டுவிட்டது. பின்னர் கண் சிவந்திருந்தது. இப்பொழுது வெள்ளைப் படலமாக வந்து வெய்யிலைப் பார்க்க கஷ்டமாக உள்ளது.*

**மருத்துவர்:** சேற்றுடன், நோய்க் கிருமியும் கண்ணிற்குள் போயிருக்கின்றது. அந்தக் கிருமிக்கு எதிராக கண்ணிற்குள் ஏற்படும் எதிர்ப்புத் தன்மையால் இந்த வெண்படலம் ஏற்பட்டிருக்கிறது.

**30வயதுடைய ஒரு நபர்:** *கடந்த ஒரு மாதமாக பார்க்கும் எல்லாப் பொருட்களும் வித்தியாசமாகத் தோன்றுகின்றது. யாராவது ஒருவரின் முகத்தைப் பார்க்கும் போது உடைந்தது போன்று தெரிகின்றது. பீங்கானைப் பார்க்கும் போது அது உடைந்தது போல் இருக்கின்றது. வெள்ளை சுவற்றை பார்க்கும்போது அதில் ஒரு இருள் வட்டம் தெரிகின்றது. வேதனையோ, கண்ணில் மாற்றமோ இல்லை. இப்படி ஏற்படுவதற்குக் காரணம் என்ன?*

**மருத்துவர்:** இந்த நோய் அநேகமாக இளைஞர்களுக்கு அல்லது நடுத்தர வயதுடைய ஆண்கள் மத்தியில் காணப்படுகின்றது. பெண்களிற்கு இந்நோய் ஏற்படுவது மிகவும் குறைவு. சாதாரணமாக இந்த நோய் ஏற்படுவது பிரச்சினைகளிற்கு முகம் கொடுப்பதன் மூலம் ஏற்படும மனக்குழப்பம் காரணமாகவே பெண்களிற்கு இந்த நோயானது கர்ப்பமாய் இருக்கும்போது அல்லது குழந்தை பிறந்த பின் ஏற்பட இடமுண்டு. காண்பவைகள் உடைந்தது போல் தெரிவதற்குக் காரணம் கண்களுக்கு கூர்மையான பார்வையைப் பெற்றுக் கொடுககும் பகுதியில் நீர்க்கொப்பளம் ஏற்படுவதால் தான் இதை மருந்து மூலம் குணமாக்க முடியும். முடிந்தளவு மனக்குழப்பத்தை அகற்றி தொடர்ச்சியாக யோசிப்பதை நிறுத்துவதன் மூலம், நோயை விரைவில் குணமாக்கலாம். (தொடரும்)

## கண் நோய்கள் பற்றிய கேள்வி-பதில்கள்

**கண் அறுவைச் சிகிச்சை மருத்துவர் ரெஜி சீமன்**

# அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர் கதிர்காமர்

# ஐ.தே.க.பிரதித்தலைவர் கருஜெயசூரிய புகழாரம்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலின் போது துப்பாக்கிக் கலாசாரத்தை ஒழிப்பதற்கு சகல கட்சிகளும் கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

தாம் பிரதிநிதித்துவம் வகிக்கும் கம்பஹா மாவட்டத்திலுள்ள ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் எந்தவிதமான குழப்பத்தையும் ஏற்படுத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டை பேணிக்காத்து நிலையான சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு காலஞ்சென்ற அமைச்சர் கதிர்காமர் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார் என்று கருஜெயசூரிய தெரிவித்தார்.

முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க காலத்திலும் கதிர்காமர் அமைச்சர் இல்லாதபோதும் அவருக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததை பிரதித்தலைவர் நினைவுகூர்ந்தார்.

காலஞ்சென்ற அமைச்சர் கதிர்காமர் மேற்கொண்ட சமாதான முயற்சிகளை மேலும் வலுப்படுத்த அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம மந்திரி வேட்பாளராகக் கருஜெயசூரிய தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டும் முகமாக நடைபெற்ற வைபவத்திலேயே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். (து-7)



இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் 66ஆம் ஆண்டு நிறைவையொட்டி மேற்படி வங்கி முகாமையாளர் வீ.எஸ்.சிவநாதனுக்கும் மற்றைய அலுவலர்களுக்கும் பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா தேவி சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சித்ருபானந்தா சமய நூல்களை வழங்கினார்.

# இன்று ஒரு தகவல்

## நாடித்துடிப்பு

உடல் நிலை சரியில்லை என்று மருத்துவரிடம் போனால் உடனே அவர் கையைப் பிடித்துப் பார்க்கிறாரே! எதற்கு? எவ்வளவு பணம் வைததிருக்கிறோம் என்று தெரிந்துகொள்வதற்காகவா? இல்லை. நாடித்துடிப்பு எப்படி இருக்கிறது என்று தெரிந்துகொள்வதற்கு. உடல்நிலை நன்றாக இருக்கிறதா இல்லையா என்பதை நாடித்துடிப்பு காட்டிக் கொடுத்துவிடும்.

ஒவ்வொருமுறை இதயம் சுருங்கும்போதும் இரத்தம் வெளியே தள்ளப்படுகிறது...அதை ஒரு நாடித்துடிப்பாக நாம் உணர்கிறோம். நாடித்துடிப்பை மணிக்கட்டில்தான் பார்க்க வேண்டும் என்றில்லை. கழுத்திற்குப் பக்கத்தில், முழங்கால், கணுக்காலின் பின்பக்கம். இப்படிப் பல இடங்களில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.ஒரு இடத்திற்கு இரண்டு இடமாகப் பார்த்துத் தெரிந்து கொள்வது தான் நல்லது. கையில் உள்ள இரத்தக் குழாயில் ஏதாவது தடை இருந்தால் இரண்டு கையின் மணிக்கட்டுக்களிலும் உள்ள துடிப்புக்கும் வித்தியாசம் இருக்கும்.

ஒருவருக்கு நாடித்துடிப்பு கையில் ஒருவிதமாகவும்,காலில் ஒருவிதமாகவும் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். வயிற்றுப் பகுதியில் எங்கேயோ இரத்தக் குழாயில் சுருக்கம் ஏறபட்டிருக்கிறது என்று அர்த்தம்.சாதாரணமாக ஒரு சராசரி மனிதனுக்கு நிமிடத்திற்கு 72 தடவை நாடி துடிக்கும். சில சந்தர்ப்பங்களில் இது அதிகமாகும். உடல் உஷ்ணம் சாதாரண நிலையில் $98.4^0$ F. காய்ச்சலினால் இது $99.4^0$ Fஆனால் நாடித்துடிப்பு 80 ஆகிவிடும். அதாவது உஷ்ணம் $1^0$F அதிகமானால் துடிப்பு எண்ணிககை 8 அதிகமாகும். குழந்தைகளுக்கு 1டிகிரி கூடினால் துடிப்பு 12 அதிகமாகும். பெரியவர்களை விட குழந்தைகளுக்கு நாடித்துடிப்பு அதிகமாக இருக்கும். அதைப் பார்த்துவிட்டு பயந்துவிடக் கூடாது.

பிறக்கும் போது குழந்தையின் நாடித்துடிப்பு நிமிடத்திற்கு சுமாராக 130. ஒரு வருடத்திற்குப் பிண்பு 110. 3வருடத்திற்குப் பின் 100. இப்படிக் குறைந்துகொண்டே வரும். 8 வயதில் 90. 12வயதில நாடித்துடிப்பு 80ஆக இருக்கும். நாடித்துடிப்பு அதிகரிக்கிறதா இல்லையா என்பதை வைத்து சில காய்ச்சலைக் கண்டுபிடிக்கலாம். உதாரணத்திற்கு மலேரியா காய்ச்சல் வந்தால் நாடித்துடிப்பு அதிகரிக்கும். டைபாய்ட் வந்தால் நாடித்துடிப்பு அதிகரிப்பதில்லை.

ஒருவர் காய்ச்சல் என்று கூறிக்கொண்டு டாக்டரிடம் வருகிறார். டாக்டர் பார்க்கிறார் **Temperature** $102^0$F. அதாவது **Normal** ஐ விட $3.5^0$Fஅதிகம். அப்படியென்றால் **Pulse rate** 1டிகிரிக்கு 8வீதமாக அதிகமாக இருக்க வேண்டும்.அதாவது 28 அதிகரித்திருக்க வேண்டும். அப்படியென்றால் **Normal** 72உடன் 28 சேர்த்தால் 100 ஆக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். ஆனால் அப்படி இல்லை. 80,85 தான் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படியென்றால் அது மலோரியா இல்லை. டைபாய்டாகத் தான் இருக்க வேண்டும் என்று யூகிக்கிறார். **Pulse** உடன் **Rhythm** உம் மிக முக்கியம். இப்போது இதைக் கவனியுங்கள்.**Normal** நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 72. அப்படியென்றால் 5 விநாடிக்கு 6 துடிப்பு. ஒருவரது கையைப் பார்க்கிறீர்கள் அல்லது ஸ்டேதஸ் கோப் வைத்துப் பார்க்கிறீர்கள்.முதல் 5 விநாடியில் 6துடிப்பு அடுத்த 5விநாடியில் 7துடிப்பு அடுத்த 5விநாடியில் 6 அடுத்த 5 விநாடியில் 7. இப்படி வித்தியாசமாக இருக்கிறது என்று வைத்துக கொள்ளுங்கள். இதற்கு என்ன அர்த்தம்? இதயம் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒருமுறை மேலதிகமாகத் துடிக்கிறது என்று அர்த்தம். இதற்கு **Regularly irregular Pulse** என்று பெயர். ஒரு சிலவகை இதயக் கோளாறுகளுக்கு இது ஒரு அடையாளம். **Irregularly irregular Pulse** என்று ஒரு வகை. அது எப்படியென் றால் முதல் 5விநாடியில் 6 துடிப்பு. அடுத்த 5விநாடிக்கு 13துடிப்பு. அடுத்த 5விநாடியில் 9. அடுத்து வெறும் 2. இப்படி ஏடா கூடமாகத துடிக்கும். இப்படி இருந்தால் நிலைமை இன்னும் கொஞ்சம் சீரியஸ் என்று அர்த்தம்.

நாடித்துடிப்பின் விதமும் அமைப்பும் கூட சில வியாதிகளைக் கண்டுபிடிப்பதற்கு உதவும். சாதாரணமாக ஒருவர் மூச்சு இழுக்கும் போது நாடித்துடிப்பு விரைவாகவும் மூச்சுவிடும் போது மெதுவாகவும் இருக்கும். இதற்கு நேர்மாறாக இருக்கிறது என்று வைத்துக கொள்ளுங்கள். இதயத்தை மூடியிருக்கும் **Membrane** இல் ஏதோ நோய் என்று அர்த்தம்.

சில சமயம் இதயம் **Strong** ஆகவும் வீக்காகவும் மாறி மாறித் துடிக்கும். ஒரு துடிப்பு **Strong** அடுத்தது **Slow!** இப்படி இருந்தால் இதயத் தசையில் **(Heart Muscle)** ஏதோ சீரியஸ் **Disease** என்று அர்த்தம். சில மருத்துவர்கள் நாடித்துடிப்பை பார்த்து **Blood Pressure** எவ்வளவு என்று உத்தேசமாகக் கூறி விடுவார்கள். கொஞ்சம் அழுத்திப் பிடித்துப் பார்ப்பார்கள். **B.P** தெரிந்து கொள்வதற்கு பயந்துவிடக்கூடாது. சைனாவில் ஒரு பெரிய டாக்டர் இருந்தார். நாடித்துடிப்புப் பார்ப்பதில் கில்லாடி. நாடித்துடிப்பை மட்டும் பார்த்துவிட்டு என்ன வியாதி என்று துல்லியமாகக் கண்டுபிடித்து விடுவாராம்.

ஒரு தடவை எனக்கும் ஒரு ஆசை வந்தது. டாக்டர்கள் மாதிரி ஸ்டெதஸ் கோப்பை காதில் வைத்துப்பார்க்க வேண்டும் என்று. எனக்கு வேண்டப்பட்ட ஒரு டாக்டரிடம் கொஞ்சநேரம் அதை இரவில் வாங்கி காதில் வைத்துக்கொண்டு அவரது நெஞ்சிலேயே வைத்து சோதித்துப் பார்த்தேன். **Normal Pulse** ரேட் ஒரு நிமிடத்திற்கு 72 தானே இருக்கவேண்டும்.,. அப்படி இல்லை. 60 தான் இருந்தது.

"என்ன டாக்டர் உங்களுக்கே நாடித்துடிப்பு சரியாக இல்லையே" எனறேன். அவர் நிதானமாகச் சொன்னார்."நீங்கள் ஸ்டெதஸ்கோப் வைத்துப் பார்க்கும் இடம் எனது சட்டைப் பையில் உள்ள பொக்கெற். அதற்குள் இருப்பது எனது மணிக்கூடு. நிமிடத்திற்கு 60 வினாடி தானே. அந்த சத்தம் தான் நீங்கள் கேட்பது" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# இனந்தெரியாதோரின் தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் மூவர் காயம்

(அம்பாறை)

அமபாறை மாவட்ட ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் 3பேர் காயமடைந்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சி.டி.என்.கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் ஆலையடிவேம்பு ஆர்.ரி.வித்தியாலயத்தில் அமைந்துள்ள சுனாமி நலன்புரி நிலையத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்தவர்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுனாமி நலன்புரி நிலையத்திற்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான முறையில் சிலர் நடமாடியதைக் கண்டு அவர்களை நோக்கி கடமையில் இருந்த பாதுகாப்புப் படையினர் சென்ற போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காயமடைந்த விசேட அதிரடிப்படை வீரரும், பொலிஸ் உத்தியோகத்தரும், ஊர்காவற்படை வீரரும் சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைததிய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கல்முனை,பாண்டிருப்புப் பகுதியில் வீதிச் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 7.45 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி ஒருவரும் ஊர்காவற்படை வீரர் ஒருவரும் கல்முனை வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொகான் அபயவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவத்தை அடுத்து சந்தேக நபர்களைக் கைது செய்யும் பொருட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார் (அ-9)

# கதிர்காமர் கொலை மர்மம் நீடிக்கிறது

# கொழும்பு நகரில் இராணுவக் கெடுபிடி

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் திரும்பிய பக்கமெல்லாம் திகில். தெருக்கள் முழுவதையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இராணுவத்தின் திடீர் திடீர் வாகனச் சோதனைகள் துறைமுகத்திலும் விமான நிலையத்திலும் தீவிர கண்காணிப்பு.

கதிர்காமரின் படு கொலையையடுத்து மேற்கொள்ளப்பட்டிருக்கும் இத்தகைய நடவடிக்கைகளால் கொழும்பு முழுக்க தொடர்ந்தும் பரபரப்புத் தான்.

இராணுவத்தினரின் தொடர் வேட்டையில் கதிர்காமர் படுகொலை தொடர்பாக கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்ட 7 பேரைத் தவிர மேலும் 5 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கதிர்காமரைச் சுட்டுக்கொன்ற மர்ம நபர்கள் இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் பக்கத்து வீட்டில் இருந்து கைக்குண்டு வீசும் சாதனம், ரெலஸ்கோப் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மட்டுமே இதுபோன்ற பொருட்களைப் பயன்படுத்துவார்கள் என்று கூறியுள்ள அவர், இதன்மூலம் கதிர்காமரின் கொலையில் அவர்களின் தொடர்பு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இநதக் கொலைக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என விடுதலைப் புலிகள் தொடர்ந்து மறுத்து வருகின்றனர்.

அமைதி முயற்சியை விரும்பாத இராணுவத்தின் ஒரு பிரிவினரே கதிர்காமரைக் கொன்றிருக்கலாம் என்றும் புதிய குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

இதனால் கதிர்காமர் படுகொலையில் மர்மம் நீடிக்கிறது. (து-2)

# வெளியுறவு அமைச்சர் கதிர்காமரை விடுதலைப்புலிகளே கொலை செய்தனர்

**-ஜனாதிபதி குற்றச்சாட்டு**

(கொழும்பு)

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை விடுதலைப்புலிகளே கொலை செய்ததாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம்சாட்டியிருககிறாா.

சமீபத்தில் தேசிய தொலைக்காட்சிகளில் தோன்றி மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, ஆரம்ப விசாரணைகள் விடுதலைப் புலிகளே இந்தக் கொலைககுப் பொறுப்பு எனக் கூறுவதாகவும் விடுதலைப புலிகள் இதனை மறுக்கின்ற போதிலும் அது ஏற்கக் கூடியதாக இல்லை என்றும் கூறியிருக்கிறார்.

பயங்கரவாதிகள் இப்படியான விடயங்களைத் தொடர்ந்து செய்வதற்கான காரணங்களை அரசியல ரீதியில் தீர்க்கமுற்பட் வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, நேற்று முன்தினம் கொழும்பில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த விவகாரம் தொடர்பில் புலிகள் மீது சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கேட்டிருக்கிறார்.

கதர்காமரது கொலையை தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதியும் கண்டித்திருக்கிறார்கள். (து-2)

# பிரச்சினைகள் தீர ஒரேவழி ஜனாதிபதித் தேர்தலே!-ரணில்

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையால் போர்நிறுத்த ஒப்பந்தம் நிச்சயமற்ற நிலையை அடைந்திருப்பதாகவும் அன்னாரின் மறைவு துரதிஷ்டவசமானது எனவும் எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புததளம் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனப்படி இந்த வருடமே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், அரசு தனது தோல்வியை மூடிமறைப்பதற்காக தேர்தலை ஒத்திவைத்தால் பொதுமக்களே அதற்கான தீர்வை எடுப்பார்கள் என்றார்.

வாழ்க்கைச் செலவு இன்று பன்மடங்கு உயர்ந்துள்ளது. இதனைத் தடுப்பதற்கு அரசு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றும் மக்கள் குறைகளைப் போக்கவும் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லவும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும் ஜனாதிபதித் தேர்தலே ஒரே வழி என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். (து-9)

# ஆர்ப்பாட்டக்காரர்களால் திண்டாடும் கோட்டை புகையிரத நிலையம்

(கொழும்பு)

அடிக்கடி நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்களால் கொழும்பு கோட்டை ரயில் நிலையததின் அன்றாட அலுவல்கள் பாதிப்படைவதாகவும், பொலிஸார் கண்ணீர்புகைக் குண்டுகளைப் பாவிப்பதால் பிரயாணிகள் பாதுகாப்புத் தேடி அங்குமிங்கும் ஓடி அலைவதாகவும் சில வேளைகளில் கண்ணீர்புகைக் குண்டுகள் புகையிரத நிலையத்தினுள் விழுவதாகவும் புகையிரதப் பகுதிப் பொது முகாமையாளர் பியால் டீ சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தின் போது ரிக்கட் வழங்குவதை ஒரு மணித்தியாலத்திற்கு நிறுத்தி வைக்க வேண்டியிருந்தது என்றும், ரயில் வண்டிகளை 45 நிமிடங்க்ளுக்கு நிறுத்தி வைக்க வேண்டியிருந்தது என்றும் கண்ணீர்புகைக் குண்டுகள் புகைவண்டி மேடையில் வீழ்ந்து வெடித்தன என்றும் புகையிரத நிலைய அதிகாரி ஒருவா தெரிவித்தார்.

கோட்டை புகையிரத நிலையம் இப்பொழுது ஆர்ப்பாட்டக்காரர்களின் மத்திய நிலையமாகிவிட்டது. மிகவும் விசாலமான காலிமுகத்திடல் போன்ற இடங்கள் இருக்கையில் மக்களின் அத்தியாவசிய சேவைப் பகுதியான ரயில் நிலையப் பகுதியை ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளுக்கு பாவித்தல் பொருத்தமானதல்ல என்று கோட்டை புகையிரத நிலைய அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்தார்.

(து-6)

# தமிழகப் பயணம்

**பயணக் கட்டுரை**

## நடிகை குஷ்பு வந்தார்

## மற்றாஸ் மெடிக்கல் மிசனில் ரெலி-மெடிசின் அறிமுகம்

என்.விஜயன்

51 ஜே.ஜே.நகர், சென்னையிலுள்ள மற்றாஸ் மெடிக்கல் மிசனில், ஊடகவியலாளர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து கொண்டோம். தமது அழைப்பிதழுக்கு வருகை தந்த ஊடகவியலாளர்களை அறிந்து கொள்வதற்காக ஓர் பதிவுப் புத்தகத்தில் கையொப்பம் வேண்டிக் கொண்டார்கள்.

சற்று நேரததிற்கெல்லாம் எமக்கு பொலித்தீன் வகையிலான கோவை (File), குறிப்புப்புத்தகம் (Note Book), பேனா (Pen) என்பன தரப்பட்டது. ஒட்டுமொத்தத்தில் அதனது பெறுமதி இந்திய ரூபாவில் ஐம்பதாக இருக்கலாம் என்பது எனது கணிப்பு. பெறுமதி குறைவாக இருப்பினும் ஓர் பொருளை அன்பளிப்பாக கொடுக்குமபோது அதனைப் பெற்றுக்கொள்பவருக்கு இருக்கக்கூடிய உள்ளார்ந்தமான மகிழ்வு வித்தியாசமானதே. அவ்வகையில் குசேலரின் அவலை, ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்ட கண்ணபிரான் போல நாமும் தரப்பட்டவற்றைப் பெற்றுக்கொண்டோம்.

### நிகழ்ச்சி ஆரம்பம்

குறிப்பிட்ட நேரத்திற்கு நிகழ்ச்சி ஆரம்பமாகியது. நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்தவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. எல்லோரும் இந்தியாவின் தலைசிறந்த வைத்திய நிபுணர்கள். நிகழ்வில் விசேட விருந்தினராக திரைப்பட நடிகை குஷ்பு அழைக்கப்பட்டிருநதார்.

நிகழ்விற்கு தலைமை வகித்தவர் மற்றாஸ் மெடிக்கல் மிசனின் செயற்பாடுபற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

மற்றாஸ் மெடிக்கல் மிசன் என்பது மருத்துவமனை (Hospital), ஆராய்ச்சி (Research), பயிற்சி (Training) ஆகிய செயற்பாடுகளைச் செய்து வருகின்றது. அன்றைய தினம் ரெலி-மெடிசின் (Tele-Medicine) என்ற நவீன மருத்துவத் தொழில்நுட்ப முறையை அவர்கள் அறிமுகம் செய்து வைக்கின்றார்கள். அதற்காகவே அந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### ரெலி-மெடிசின்


ரெலி-மெடிசின் என்பது ஏனைய வைத்தியசாலைகளில் இருக்கின்ற நோயாளர்களும் துறைசார் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கமைவாக சிகிச்சை பெறமுடியும்.

அதாவது, ஒரு வைத்தியசாலையில் இருக்கின்ற நோயாளிக்கு மற்றாஸ் மெடிக்கல் மிசனில் கடமையாற்றும் வைத்திய நிபுணரின் ஆலோசனைப்படி சிகிச்சையளிப்பதற்கு ரெலி-மெடிசின் முறை பெரிதும் உதவுகின்றது.

ரெலி-மெடிசின் மூலம் நோயாளியையும் அவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சிகிச்சைகள், அவரது எக்ஸ்ரேட்கள் போன்றவற்றையும் திரையில் பார்க்க முடிவதுடன், அவரிடம் நேரில் கதைப்பது போன்று கேள்விகளைக் கேட்டு நோயின் குணங்குறிகளை அறியமுடிகின்றது.

அதேவேளை, பிரஸ்தாப நோயாளிக்கு சிகிச்சை அளித்த டாக்டரும் அருகில் இருந்து நோயாளியின் தகவல்களை வழங்கிக்கொள்வார்.

ரெலி-மெடிசின் முறையின் அறிமுகத்தின் போது சில நோயாளர்களுடன் உரையாடும் நிகழ்வைப் பார்வையாளர்களுக்குக் காட்டினார்கள்.



திருவள்ளூர் சூரியா கொஸ்பிற்றல், ஸ்ரீ பெரும்புதூரில் உள்ள ஜெயா கொஸ்பிற்றல் ஆகியவற்றில் இருந்த நோயாளர்கள் சிலருக்கான சிகிச்சைகளை மற்றாஸ் மெடிக்கல் மிசனில் இருந்தவாறு, வைத்திய நிபுணர்கள் ரெலி-மெடிசின் மூலமாகக் கூறினார்கள்.

நோயாளி, அவருக்குச் சிகிச்சை வழங்கும் டாக்டர் ஆகியோர் திரையில் தோன்றி மற்றாஸ் மெடிக்கல் மிசனில் உள்ள வைதத்திய நிபுணர்களுக்குத் தகவல்களை வழங்கினர்.

ஆச்சரியமாக இருந்தது. மருத்துவ உலகின் அதிகமான முன்னேற்றம் கண்டு வியப்புற்றுப் போனேன். ரெலி-மெடிசின் மூலம் குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் இருககக்கூடிய வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளை ஏனைய நோயாளர்களும் பெற்றுக் கொள்ளமுடியும் வாய்ப்பு உண்மையிலேயே வரப்பிரசாதமான ஒன்றே.

அந்த மருத்துவ வளர்ச்சிகள் நம் மண்ணை எட்டிப் பார்ப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்ற செய்தியையும இவ்விடத்தில் குறிப்பிடுவது நமது மருத்துவம் எங்கே நிற்கின்றது என்பதை ஊகித்துக் கொள்வதற்கான தேற்றமாக இருக்கும்.

### நடிகை குஷ்பு வந்தார்

ரெலி-மெடிசின் அறிமுக நிகழ்விற்கு நடிகை குஷ்புவும் அழைக்கபபட்டிருந்தார். நிகழ்ச்சி ஆரம்பமாகி சிலநேரங்கள் தாமதித்தே அவர் வருகை தந்திருந்தார். அவரோடு அவரது கணவரும், பிள்ளையும் வந்திருந்தனர்.

நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது குஷ்பு வந்திருந்தாராயினும் பார்வையாளர்கள் மத்தியில் எநதச் சலனமும் ஏற்படவில்லை. அவர்கள் நிகழ்ச்சியைப் பார்த்தவாறே இருந்தார்கள்.

நடிகை குஷ்பு வருகின்ற போது சபை சற்று சலசலக்குமென நினைததிருந்த எனக்கு அங்கிருந்தவர்களின் பக்குவமான பாங்கு வியப்பைத் தந்தது.

கவனக கலைப்பானாக இருக்கக்கூடிய குஷ்பு பற்றி எதுவும் அலட்டிக கொள்ளாதமைக்குக் காரணம் தான் என்ன? ஓ...அந்த அரங்கில் அறிவுத் திரட்சி மிகுந்தவர்கள் கூடியிருந்தார்கள் அல்லவா? அதுவே சலசலப்பிற்கு இடமின்றிப் போனதென்பதை பின்னர் உய்த்தறிந்து கொண்டேன்.

யார் வந்தாலும் நடைபெறும் நிகழ்ச்சியை அப்படியே விட்டுவிட்டு திரும்பிப் பார்க்கும் அற்பத்தனமான பழக்கத்திற்கு உட்பட்டு விட்ட எமக்கு மற்றாஸ் மெடிக்கல் மிசனில் நடந்த கூட்ட நிகழ்வுகள் புதிய அனுபவமாகவே இருந்தது.

வரவேற்பாளர்கள் குஷ்பு உள்ளிட்ட மூவரையும் அரங்கின் முன் ஆசனத்தில் இருக்க வைத்தார்கள். நிகழ்வன் ஒரு பகுதியில் நடிகை குஷ்பு பேசுவதற்காக அழைக்கப்பட்டார்.

கணீரென்ற குரல் அரங்கில் ஒலித்தது. நடிகர்களிடம் இருக்கக்கூடிய மொழித்திறன், சொல்லாட்சி சாதாரணமானதல்ல என்பதை நிருபிப்பது போல அவரின் உரை இருந்தது.

(வளரும்)

## சிறுவர் உரிமைகள் விடயத்தில் யாவரும் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

எமது சமுதாயத்தின் எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு நாம் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். இன்றைய சிறுவர்களின் உரிமைகளை நாம் மதித்துப் போற்றுவதன் மூலமும், அவற்றினை வழங்குவதன் மூலமும் சிறுவர்களின் முக்கியத்துவத்தை உணரச் செய்யலாம். எனவே சிறுவர் உரிமைகள் விடயத்தில் நாம் எலலோரும் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி வீ.மேகலிங்கம் மேற்படி வித்தியாலயத்தில் அறவழிப் போராட்டக் குழுவினால் நடாத்தப்பட்ட சிறுவர் உரிமைகள் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

சர்வதேச பயிற்சி மன்றத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இக் கருத்தரங்கு திட்ட இணைப்பாளர் திருமதி ஆர்.மீனலோஜினி தலைமையில் நடைபெற்றது.

நாவற்குழி சிறுவர் கழகத்தைச் சேர்ந்த 80சிறுவர்கள் பங்குகொண்ட இக் கருத்தரங்கில் சர்வதேச பயிற்சி மன்றத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் க.நவரூபன், நாவற்குழி கிராம சேவையாளர் ஆ.நடராஜா ஆகியோர் ஆசியுரைகள் வழங்கினர்.

நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி வீ.மேகலிங்கம் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது எதிர்கால உலகம் இன்றைய சிறுவர்களில் தங்கியுள்ளது.

ஆதலால் எமது சிறுவர்களை கல்வி, போஷாக்கு, சுகாதாரம், ஆன்மீகம், விளையாட்டு ஆகிய துறைகளில் மேன்மையுள்ளவர்களாக ஆக்குவதற்கு இதுபோன்ற விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்துதல் வேண்டும்.

இந்தவகையில் அறவழி நிறுவனத்தினர் சிறுவர்களின் நலனில் கூடிய அக்கறை காட்டிச் செயல்படுவது வரவேற்கத்தக்கதாகும எனக் குறிப்பிட்டார்.

இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் விரிவுரையாளர் கே.ரேகன், வித்தியாலய ஆசிரியர் எஸ்.சந்திரகுமார், திருமதி எஸ்.மரியநாயகம் ஆகியோர் சிறுவர் உரிமைகள் குறித்த விரிவுரைகளையும், விளையாட்டுக்களையும் போதித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(அ-16)

## யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள்

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பரீட்சைகள் எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 17ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது.

கலைமுதற் தேர்வின் 2002மற்றும் 2003 கல்வியாண்டிற்கான பரீட்சைகளே மேற்படி திகதிகளில் நடைபெறும்.

இப் பரீட்சைகள் யாழ்.பல்கலைக்கழகத்திலும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், கிடைக்காதவர்கள் யாழ். பல்கலைக் கழக வெளிவாரி கற்கைகள் பரீட்சை அலகில் தொடர்புகொள்ளுமாறும் யாழ்.பல்கலைக் கழக வெளிவாரி பதிவாளர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

(து-7)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2005

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2005

**தமிழ்மொழியும் இலக்கியமும்** நேரம் : 2 மணித்தியாலம்

*ஆசிரியர்: செல்வி பூம்புகனேஸ்வரி சபாரத்தினம் (B.A)*
*யா/ ஏழாலை சைவமகாஜன வித்தியாலயம்.*

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

**01.பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.**
**நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ)இன்றைய சமுதாயத்தில் இளைஞரின் பங்கு.

ஆ)இலங்கையின் எழில் மிகுந்த இடமான மலைநாட்டின் கவின்மிகு காட்சிகளை வர்ணித்து ஒரு வர்ணனைக் கட்டுரை.

இசுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்கச் சென்ற உமக்கு ஏற்பட்ட அனுபவங்களை விளக்கி ஒரு விவரணக் கட்டுரை எழுதுக.

ஈ)மிருகக்காட்சிச்சாலைக்குச் சென்ற நான் பறவைகளைப் பார்ப்பதற்காக அவை இருக்குமிடம் நாடிச் சென்றேன். அங்கே பலவிதமான பறவைகள் இருந்தன. உன்னைப் போல் நானும் சுதந்திரமாகத் திரிந்தவள் தான் நான். இப்போது எப்படி இருக்கிறேன் என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். ஒரு கூட்டில் அடைபட்டுக் கிடந்த பஞ்சவர்ணக் கிளி என்னைப் பார்த்து பேசத் தொடங்கியது. தொடர்ந்து அது கூறுவதாக அமைந்த கதை.

உ)நீர் பார்த்து ரசித்த ஒரு நாடகத்தின் விமர்சனத்தை எழுதுக.

**02.கீழே தரப்பட்டுள்ள (அ), (ஆ),(இ),(ஈ) என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக்கூடியவாறு வேறுவேறாக எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக).**

(அ)விலங்கொடு விலங்காய் வாழ்ந்த மனிதன் தனித்துவமாய் இலங்க சிந்தனையறிவும் அதனாலாய நல்லொழுக்கமுமே காரணமாயின. புதியன புகுதலும் பழையன கழிதலும் போல நல்லனவற்றை நம்மில் சேர்க்கும் போதே அல்லன நீக்கும் ஆற்றல் வேண்டும். சொல்லிலே மட்டுமல்ல செயலிலும் இவ்வுறுதி வேண்டும். நஞ்சு விதை விதை த்தாற் பஞ்சு மரம் முளைப்பதில்லை. முளைக்கீரை போட்டால் முருங்கைக்காய் காய்ப்பதில்லை. இது இன்று நேற்றல்ல. தொன்று தொட்டு நிற்கும் உண்மை ‘வினை விதைத்தவன் வினை அறுப்பான்’ எனும் பழமொழி இதற்குச் சான்று பகர்கின்றது. வினைகள் இருவகைப்படும். நல்வினை, தீவினை என்பன அவை. நல்வினைகள் புரிவோரை நல்லோர் என நாடு போற்றுகிறது. மகாகவி பாரதியார் ‘உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்’ என்கிறார். உண்மைதான் நல்ல சொல், நல்ல செயல், நன்னடத்தைகள் என்பன தனி மனிதனை வளம்படுத்த வல்லன.

(ஆ)கருநீல வானம் வெண்மைக்கு உருமாறிக் கொண்டிருக்கிறது. காலைக்காட்சி உதயமாகிக் கொண்டிருக்கிறது. கனத்த இருள் விலகும் அவ்வேளைகிழக்குத் திசை வெளுக்கத் தொடங்குகிறது. கொடியில்லாத தனி முல்லைப் பூப்போல விடிவெள்ளி வானில் காட்சியளிக்கிறது. உருண்டு போன இரவில் கண்ட எண்ணற்ற ஒளிப் பூக்கள் அத்தனையும் எங்கேதான் போய் ஒளிந்து கொண்டனவோ? தண்ணிலா தன் கடமை முடித்து மேற்றிசையில் மறைகிறது. சின்னஞ்சிறு சிட்டுக்கள் தம் சிருங்காரக் குரலில் கீதமிசைக்கின்றன. வண்ணப் பட்சிகள் சிறு வீணை மீட்டினாற் போல மிழற்றுகின்றன. பலவித பறவைகளும் ஒலிசெய்வது சப்தஸ்வரங்களும் சேர்ந்தொலித்தாற் போலத் தோன்றுகிறது.கீழ்த்திசை மெல்லச் சிவக்க் சிற்றொளி பரவத் தொடங்குகிறது. ஆம்! பால சூரியனின் பேரழகுப் பவனி ஆரம்பமாகின்றது.

(இ)இன்று நாம் இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இயந்திர யுகமும் அவசர கதியும் எம் வாழ்வாகிப் போய்விட்டன. மண்ணின் மைந்தர் நாம் விண்வெளியில் பயணித்துத் தண்மதியில் குதித்து விட்டோம். தலை நிமிர்ந்து நின்றுகொண்டோம். பொறியியல்,மருத்துவம்,இலக்கியம் ,மொழியறிவு எதிலும் வெற்றிக் கொடி நாட்டியபடி மானுடம் பயணம் செய்கின்றது. தொடக்கமும் முடிவும் இல்லாது அநாதயாய் அகன்று விரிந்திருக்கின்ற இப்பிரபஞ்சத்திலே தன்னுணர்வில்லாத சிற்றுயிர்கள்முதல் தன்னை உணரத்துடிக்கின்ற மனிதன் வரையாக கணக்கில்லா உயிர்கள் கணந்தோறும் உயிர்க்கின்றன,மடிகின்றன. எனினும் மனிதன் இவ்வாறான இயல்பான செயல்பாடுகளில் இருந்து வேறுபட்டும் பல்வேறு வெற்றிப் படிகளைத் தாண்டுவதற்கும் அடித்தளமே விஞ்ஞானம் எனலாம். இன்று மனித வாழ்வோடு ஒன்றறக் கலந்துவிட்ட விஞ்ஞானத்தின் அதியுயர் நிலையாகவே இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி மிளிர்கிறது.

(ஈ)ஈழத்துத் தமிழ்இலக்கிய வரலாற்றின் ஆரம்பகால வளர்ச்சிப் போக்குகள் எவ்வாறு இருந்தன என்பது பற்றிய அறிவு இன்று மிகவும் வேண்டப்படும் ஒன்றாகும். இவ்வகையில் இலக்கிய வடிவங்களில் ஒன்றான நாவல் வளர்ச்சி ஈழத்தில் எவ்வாறு ஆரம்பித்து வளர்ந்து வந்ததென்பதையும் ஆரம்பகால நாவல்களின் முக்கிய பண்பும் அப்பண்புகளை நிர்ணயித்த காரணிகளையும் நோக்குதல் அவசியம். 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய சமூகத்தில் நிகழ்ந்த கைத்தொழிற் புரட்சியின் விளைவால் பாரம்பரிய சமூக அமைப்பு நிலைகுலைய புதிய சமூக, பொருளாதார உறவுகள் தோன்றின. எனவே இவற்றைப் பலப்படுத்தும் வகையில் நாவல் வடிவமும் மாற்றம் பெறவேண்டியதாயிற்று. வசனவடிவத்திற் கணிசமான அளவு நீளமுடையதாக நடைமுறை வாழ்க்கையோடு ஒட்டிய கதைப்பொருளுடன் மாந்தரது இயல்பான குணங்களை உணர்ச்சி மோதல்களுடன் சித்தரிப்பதாக அமைவது நாவல் என்ற கருத்து மேலோங்கியது.

**03.பின்வரும் செய்யுட் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

சின்னஞ் சிறுகிளியே – கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே
என்னை கலி தீர்த்தே – உலகில்
ஏற்றம் புரியவந்தாய்!

பிள்ளைக் கனியமுதே – கண்ணம்மா!
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே என்முன்னே
ஆடிவருந் தேனே

ஓடி வருகையிலே – கண்ணம்மா
உள்ளங் குளிருதடீ
ஆடித் திரிதல் கண்டால் – உன்னைப் போய்
ஆவி தழுவுதடீ

உச்சி தனை முகர்ந்தால் – கருவம்
ஓங்கி வளருதடீ
மெச்சி யுனை யூரார் – புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடீ

கன்னத்தில் முத்தமிட்டால் – உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடீ
உன்னைத் தழுவிடிலோ – கண்ணம்மா
உன்மத்த மாகுதடீ

சற்றுன் முகஞ்சிவந்தால் – மனது
சஞ்சல மாகுதடீ
நெற்றி சுருங்கக் கண்டால் – எனக்கு
நெஞ்சம் பதைக்குதடீ

உன் கண்ணில் நீர்வழிந்தால் – என்னெஞ்சில்
உதிரங் கொட்டுதடீ
என் கண்ணில் பாவையன்றோ? –
கண்ணம்மா!
என்னுயிர் நின்னதன்றோ?

(அ)குழந்தையின் எச்செயல்கள் கவிஞருக்கு இன்பமூட்டுவனவாய் உள்ளன என பாடலில் கூறப்பட்டுள்ளது?

(ஆ)‘சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா ’என்ற பாடலடிகளில் வந்துள்ள உவமானம், உவயேம் என்பவற்றை எடுத்துக் கூறி உவமை அணியினை விளக்குக.

(இ) (I)‘ஆடித்திரிதல் கண்டால் உன்னைப்போய் ஆவிதழுவுதடீ’ – ஆவி தழுவுதல் என்பதன் பொருள் யாது?

(II)‘சற்றுன் முகஞ்சிவந்தால் – மனது சஞ்சலமாகுதடீ’ இதில் சஞ்சலம் என்பதன் பொருள் யாது?

(ஈ)குழந்தைக்கு எவை ஏற்பட்டால் மனதில் துன்பம் ஏற்படும் எனக் கவிஞர் குறிப்பிடுகிறார்?

(உ)பின்வரும் தொடர்களின் கருத்தை எழுதுக.
(I)‘உன்கண்ணில் நீர்வடிந்தால் என்னெஞ்சில்
உதிரங் கொட்டுதடி’
(II)பிள்ளைக் கனியமுதே – கண்ணம்மா!
பேசும் பொற சித்திரமே!’

(ஊ) இப்பாடலில் மேலோங்கிக் காணப்படும் சுவைகள் எவை?

(எ) இப்பாடலை கவிஞர் பாடுவதன் நோக்கம் யாது? *(15 புள்ளிகள்)*

**4.பின்வரும் இரண்டு விடயங்கள் பற்றி எழுதுக.**

(அ)உங்கள் பாடசாலை மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை விழாவில் பிரபல நாட்டிய கலைஞர்கள் வழங்கும் நாட்டிய நாடகம் ஒன்றை நிகழ்த்த ஒழுங்கு செய்துள்ளீர்கள். அதனைக் கண்டுகளிக்க வருமாறு அனைவரையும் அழைக்கும் வகையில் அமைந்த 50 சொற்கள் அளவுகொண்ட ஒரு துண்டுப்பிரசுரம்.

(ஆ)புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் தலைவர் என கற்பனை செய்து கொண்டு உமது நிறுவனம் புதிதாக பேனா ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது. அப்பேனாவை அனைவரும் வாங்கிப் பயன்பெறும் வகையில் அமைந்த 45 சொற்கள் அளவிலான ஒரு விளம்பரம். *(15 புள்ளிகள்)*

## பகுதி - III

நேரம் : 2 மணித்தியாலம்

**1 ,2 ,3 ,4 ஆம் வினாக்களுக்கும் 5 தொடக்கம் 7 வரையான வினாக்களுக்கும் வேறு ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**

**விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.**
**இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

1. (அ) ‘ஒலகம் தெரிஞ்ச மாதிரிப் பேசுரியே, ஒண்ட முகம் உனக்குத் தெரியுமாகா?’

(i)இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii)யாருக்குக் கூறப்பட்டது?
(iii)எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv)இக்கூற்றை கேட்டவுடன் கேட்டவருக்கு ஏற்பட்ட மனநிலை யாது?

(ஆ) ‘துன்றிரும் குழலைவிட்டு தொழுதுவாழ்;சுற்றத் தோடும் பொன்றுதியாயின்,
என்பின் வாயிலிற் புறப்படு....’

(i)இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii)யாருக்குக் கூறப்பட்டது?
(iii)‘என்பின் வாயிலிற் புறப்படு’ என்னும் சொற்றொடர் எவ்வுணர்வை வெளிக் காட்டுகிறது?
(iv)இக் கூற்றின் மூலம் உணர்த்தப்படும் கருத்து யாது?

(இ‘வல்லை வல்லை விறகுகளும் களவே செம்பொற்
மங்கலநாண் உன் கழுத்தில் இருக்க ஏதும்
இல்லை எனச் சொல்லுவது சற்றும் ஏலாது
இதனை எனக்கு ஈவாய்’

(i)இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
(ii)இக்கூற்று யாருக்குக் கூறப்பட்டது?
(iii)எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(iv)கூறியவருக்கும் கூறப்பட்டவருக்கும் இருந்த உறவுமுறை யாது?

(ஈ)‘சிங்கக் குருளைக்கு இருதீம் சுவை ஊனை நாயின் வெங்கண் சிறு குட்டனை ஊட்ட விரும்பினாளே’

(i)இக்கூற்றுக்கு உரியவர் யார்?
(ii)இக்கூற்று யாருக்குக் கூறப்பட்டது?
(iii)இவ்வாறு கூறியவரின் உளநிலை யாது?
(iv)இக்கூற்றில் அமைந்துள்ள உவமைச் சிறப்பு யாது?

(உ)‘நெல்லுப்பாய் உழைப்பாலும்
நீங்காத பட்டினிலே...’

(i)இக்கூற்று யாருடையது?
(ii)இது யாருக்குக் கூறப்பட்டது?
(iii)இக்கூற்றின் மூலம் புலப்படுத்தப்படும் கருத்து யாது?
(iv)இக்கூற்றுக்குரியவரின் உளப்பாங்கை விளக்குக. *(20 புள்ளிகள்)*

*(0 ஆம் பக்கம் பார்க்க...)*

## நாட்டில் படுகொலைகள் தொடர்ந்தால்

# சமாதானத் தீர்வுக்கான பாதை இன்னமும் இருட்டில் தள்ளப்படும்

(யாழ்ப்பாணம்)

தனி மனித படுகொலைகளால் ஒருபோதும் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டிவிட முடியாது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டமை ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்! மனிதப் படுகொலைகளை யார் மீது யார் நிகழ்த்தினாலும் அதை நகரிகமடைந்த எந்தவொரு மனத சமூகமும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. சமாதானத்தை விரும்பும் எவரும் இந்தப் படுகொலையை நிச்சயமாக நிகழ்த்தியிருக்க முடியாது.

அன்றிலிருந்து இன்றுவரை எந்தப் படுகொலைகளையும் வன்மையாகக் கண்டித்தே வந்திருக்கிறோம். அந்தவகையில் அமைச்சர் கதிர்காமரின் படுகொலையையும் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஈ.பி.டி.பியின் செயலாளர்நயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள கண்டனச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவ் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுள்ளதாவது,

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஆற்ற வேண்டிய பணிகள் நிறையவே உண்டு. அதற்காகக் கனிந்து வந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த வேண்டும். கடமையும் எம் முன்னாள் விரிந்து கிடக்கின்றது. சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் பாதையை முழுமையாக இறுக மூடிவிட்டு இதுபோன்ற படுகொலைகள் மூலம் வஞ்சம் தீர்த்துக் கொள்ள முடியுமே தவிர மக்களின் பிரச்சி னைக்கு உரிய தீர்வை எட்டிவிட முடியாது.

இனப்பிரச்சினை விடயத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு கௌரவமானதும் நியாயமானதுமான தீர்வு கிட்டவேண்டும் என்பதில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அக்கறையாக இருந்த ஒருவர்.

இறுதியாக ஜனாதிபதி கடும் எதிர்பார்ப்புகளுக்கும் அரசியல் நெருக்கடிகளுக்கும் மத்தியில் பொதுக்கட்டமைப்பு குறித்து எடுத்த உறுதியான நிலைப்பாட்டினை அமைச்சர் கதிர்காமர் வெளிப்படையாக ஆதரித்து நின்றவர்.

ஆகவே, இது போன்ற படுகொலைகள் இனப்பரச்சினைத் தீர்வுக்கு எதிராக தென்னிலங்கையில் இருக்கும் பேரினவாதத்திற்கு இன்னமும் உரமூட்டுவதாகவே அமையும்.

படுகொலைகளை நிறுத்துவதற்கு சர்வதேச சமூகமும், மனித உரிமை அமைப்புகளும் விரைந்து செயலாற்ற வேண்டும். இன்றேல்சிக்கலடைந்து இறுகிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கிய பாதை என்பது இன்னமும் இருட்டில் தள்ளப்படும் ஆபத்தான நிலையையே அடையும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# அபராத திருத்தக் கட்டணப் பத்திரங்கள் பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கவில்லை

(கொழும்பு)

மோட்டார் வாகன குற்றவியல் தொடர்பான திருத்தியமைக்கப்பட்ட அபராத கட்டணத் தொகை உள்ளடக்கப்பட்ட பத்திரங்கள் இதுவரை பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கவில்லை என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிடப்பட்ட பத்திரங்கள் கிடைக்கும் வரை போக்குவரத்து குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதால் பல சிக்கல்கள் தோன்றியுள்ளதாக போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாக் தெரிவிக்கப்படுகின்றது.

பழைய அபராத பத்திரத்தை றப்பர் முத்திரையின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட கணக்குகளைப் பதித்து புதிய அபராதத் தொகையை அறவிடுவதற்கு சட்டமா அதிபர் அங்கீகாரம் அளித்துள்ளார்.

இதன் அடிப்படையில் புதிய அபராதப் பத்திரம் கிடைக்கும்வரை குறிப்பிடப்பட்ட முறையை பயன்படுத்துமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் சுற்றறிக்கைமூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# ஓடும் பஸ்ஸில் 10 ஆயிரம் ரூபா கொள்ளை திருடிய 3 சிறுவர்கள் பிடிக்கப்பட்டனர்

(கொழும்புத்துறை)

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற மனிபஸ்ஸிற்குள் பயணி ஒருவரிடமிருந்து பத்தாயிரம் ரூபா திருடிய மூன்று சிறுவர்கள் பிடிபட்டனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, மினிபஸ்ஸில் குறித்த பயணி நித்திரை செய்து கொண்டிருந்த சமயம் அப்பயணியிடமிருந்து 10 ஆயிரம் ரூபாவைத் திருடிய சிறுவர்களில் ஒருவர் நல்லூர் பகுதியில் மினிபஸ்ஸை நிறுத்தித் தப்பிக்க முயன்ற வேளை நடத்துநரின் சமயோசித நடவடிக்கையால் கொன்ரைக்டர் உசாரடைந்து திருடிய மூவரும் நல்லூர் பகுதி இளைஞர்களின் துணையுடன் பிடிக்கப்பட்டுவிடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நல்லூர் திருவிழாக் காலத்தில் இத்தகைய திருட்டுச் செயல்கள் அதிக அளவில் நடைபெறுவதால் பக்தர்களை எச்சரிக்கையாக இருக்கும்படி கலாசாரம் பேணும் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (து-51)

## சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

(கோப்பாய்)

கோப்பாய் மத்திப் பகுதியில் சட்டவிரோத மின்சாரம் பெறுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

இதனால் நிரந்தர மின் இணைப்பைப் பெறுவோர் பலவித சிரமங்களை எதிர்நேக்கி வருவதாகப் பாதிக்கப்பட்டோர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ற-79)

## போயா ஆன்மிக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை போயா ஆன்மிக நிகழ்ச்சிகள் அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும். (ற)

## இரதோற்சவம்

(பொன்னாலை)

வரலாற்றுத் தொன்மைமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவில் எதிர்வரும் 27ஆம் திகதி சனக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 28ஆம் தகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (ற-49)

## ரூ. 21 இலட்சம் செலவில் முன்பள்ளிக்கு கட்டடம்

(பருத்தித்துறை)

வடமராட்சி அல்லையம்பதி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய முன்பள்ளிக்குச் சுமார் 21 இலட்சம் ரூபா செலவில் கட்டடமொன்று கட்டப்படவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நிலையத் தலைவர் தலைமையில் அண் மையில் நடைபெற்றது.

வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை.சத்தியசீலன் மங்கள விளக்கேற்ற, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவநேசன் முன்பள்ளிக்கான அடிக் கல்லைச் சம்பிரதாயபூர்வமாக நாட்டி வைத்தார்.

இம் முன்பள்ளிக்கான நிதிஉதவியை உலக தரி சன நிறுவனம் வழங்கியுள்ளது. (ற-52)

## தமிழ்மொழியும் இலக்கியமும்

(0 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**2.பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.**

(அ)'வெறுவான வெளிமீது மழை வந்து சீறும்
**வெறிகொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்**
நெறிமாறு படநூறு சுழி வந்து சூழும்
நிலையான தரை நீரில் இலை போல் ஈடாடும்'

(ஆ)'பேரொளி பரப்பில் பொங்கும்
பெருகிய அழகுவெள்ளச்
சார்பினில் கதீஜா வென்னும் தையல்
தன் **கரிய வாட்கண்**
**கூருடைக் கயல்களோடிக் குதித்தன**
குதித்துத் தேக்கி
வாரிய வதனஞ் சேரந்து
மறுக்கமுற்றிருந்த தன்றே'

(இ'வழிவரும் இளைப்பினோடும் வருந்திய பசியினாலே
"அழிவுறும் ஐயன்"என்னும் அன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன் செய் குறும்பயிர் தடவிப் **பாசப்**
**பழிமுதல் பறிப்பார் போலப்** பறித்தவை கறிக்கு நல்க'

(ஈ)'அடக்க முடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத் தலையில்
**ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்**
**வாடி யிருக்குமாங் கொக்கு**'

(உ)"பாவியேன் மகனே"என்பள்; வதைப்பள் மேன்முகத்தில் மோதித்
தாவியே விழுவள்; நின்று தயங்கியே மயங்கி வீழ்வள்;
காவியங் கண்ணீர் பாயக் கதறுவள்; பதறி ஏங்கி
**ஆவியைத் தேடித் தேடி அலமரும் உடலம் ஒத்தாள்** *(20புள்ளிகள்)*

**3.பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை எழுதுக.**

(அ)ஆன்மீகன் தன்னைப் பற்றியும் தனது செயல் பற்றியும் மனக் கவலையுடன் எவ்வாறு சுவிசேஷனுக்குக் கூறுகிறான் என்பதை விளக்குக.

(ஆ)அமுத சுரபி என்னும் அட்சய பாத்திரத்தின் சிறப்பு மணிமேகலையில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

(இ)' காலம் எப்படி மாறிவிட்ட போதும் மனிதன் வாழ்ந்த வாழ்க்கைத் தழும்புகள் இலேசில் மறைந்து போவதில்லை' என 'பழையதும் புதியதும்' கட்டுரையில் கார்த்திகேசு கூறக் காரணம் என்ன? *(14 புள்ளிகள்)*

**4.பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை எழுதுக.**

(அ)மாறனார் வயலுக்குச் சென்ற காட்சி இளையான் குடி மாறநாயனார் புராணத்தில் எவ்வாறு உள்ளத்தைத் தொடுமாறு காட்டப்பட்டுள்ளதென்பதை தெளிவு படுத்துக.

(ஆ)நமுறூதின் படைகளுடன் எழுந்த பெண்களின் கூட்டத்தை ஆசிரியர் எவ்வாறு வர்ணிக்கின்றார் என்பதைத் தெளிவுபடுத்துக.

(இதங்கம்மா பற்றிய கவிதையில் தங்கம்மாவின் வறுமை நிலை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது என்பதை,விளக்குக. *(16புள்ளிகள்)*

**5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.**

5.பொற்கிழிகள் தாமே அறுந்து விழுமாறு ஔவைப் பெருமாட்டியாரால் பாடப்பட்ட பாடல்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள சிறந்த உண்மைகளைத் தொகுத்து எழுதுக. *(10 புள்ளிகள்)*

6.(அ) 'முடியாத கதைகள் பல' என்ற தலைப்பு இச் சிறுகதைக்கு எவ்விதம் பொருத்தமாக அமைந்துள்ளது என்பதை விளக்குக.

(ஆ)பிரசா உரிமை பெறுவதில் மலையக மக்கள் படும்பாடு எவ்வாறு இச்சிறுகதையில் காட்டப்பட்டுள்ளது. *(10 புள்ளிகள்)*

7.(அ)துஷ்யந்தன் கணையாழியைப் பார்த்தவுடன் அவனுக்குப் பழைய நினைவுகள் வருதலும் பட்ட வேதனைகளும் வார்த்தைகளையும் தெளிவுறுத்துக.

(ஆ)கருத்தில் மட்டும் அறிந்ததைக் கட்புலனுக்கு கொண்டு வருவதில் உவமை பயன்படுகிறது. இதனை உவமை நயத்தில் கூறப்பட்டுள்ள சான்றுகள் மூலம் விளக்குக. *(10 புள்ளிகள்)*

## தமிழ்மொழியும் இலக்கியமும்
## பகுதி - I இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01.(2) | 02.(3) | 03.(1) | 04.(4) | 05.(2) | 06.(3) |
| 07.(1) | 08.(3) | 09.(2) | 10.(1) | 11.(3) | 12.(4) |
| 13.(2) | 14.(1) | 15.(4) | 16.(1) | 17.(3) | 18.(2) |
| 19.(3) | 20.(2) | 21.(4) | 22.(3) | 23.(2) | 24.(3) |
| 25.(3) | 26.(4) | 27.(1) | 28.(4) | 29.(2) | 30.(3) |
| 31.(1) | 32.(3) | 33.(4) | 34.(3) | 35.(1) | 36.(2) |
| 37.(1) | 38.(4) | 39.(1) | 40.(3) | | |

**க.பொ.த (சா/ த) மாணவர்களே!**
**உங்கள் வலம்புரியில் தொடர்ந்தும் பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்.**

### மூதாதை!!

மனித குலத்தின்
மூதாமை நானே என்று
மந்தியார் பறை சாற்றுகிறாரோ?
கூர்ப்பின் பரிணாமத்தைப்
புரியவைக்கத்தான்
பத்திரிகையை கையிலெடுத்துக்
காட்டுகிறாரோ?

கி. குகநாதன், புலோலி.

### பேப்பர் பார்ப்பதற்கு...

'வலம்புரி' பேப்பர் பார்ப்பதற்கு
இவருக்கு நெடுநாள் ஒரு ஆசை
தத்தா இல்லாத நேரத்திலே
பேப்பரை கையில் எடுத்துவிட்டார்
சிந்தனை எல்லாம் ஓட விட்டார்
மௌனத்தின் தேடல்கள் பார்ப்பதற்கு!

ம.கீதா,
யாழ்ப்பாணம்.

# மௌனத்தின்



### புத்தியைத் தீட்ட....

குரங்கே!
உன்னில் இருந்து தோற்றம்
பெற்றான் மனிதன்
அவனுடைய மூளை இன்று
மந்தமாகிப் போகிறதே என்று
நீ புத்தகத்தை கைய்யிலே
எடுத்து - உனது
புத்தியைத் தீட்டுகிறாயோ?

ம.டினேசா,
கலட்டி.

# தேடல்கள் - 67

### மாட்சிமைதான் என்னே!

மாக்களில் ஒருவன் மானசீகமாக இருந்து
மாபெரும் பத்திரிகையை
மாண்பாக வாசிக்கும்
மாட்சிமைதான் என்னே!

P.S ராணி, வட்டுக்கோட்டை

### வாசிப்பின் மகிமை

மனிதரின் வாசிப்புப் பழக்கம்
மங்கி வரும் இக்காலத்தில்
மந்தி பத்திரிகை வாசிக்கும்
விந்தைதான் என்ன?
ஓ......
வாசிப்பின் மகிமையை
மாந்தர்க்கு உணர்த்த
வலிந்து பத்திரிகையை
எடுத்துதாரோ மந்தியார் கையில்...

பி.பவானி, கொக்குவில்.

### உனக்கென்ன....

ஒருசாண் வயிற்றை நிரப்பிட
ஏழை நாம் கல்வி கற்று
வேலை தேடுகிறோம்
தினமும் பத்திரிகையில்.....
எமது விதி அது
உனக்கென்ன தலையெழுத்து
இந்தப் பத்திரிகை பார்க்க.....?

என்.நிகா, உடுவில்

### பத்திரிகை பார்க்க...

பத்திரிகையைப் புரட்டினால்
பக்கமெல்லாம் கொலை, கொள்ளை..
பகுத்தறிவு படைத்த
மனிதரின் படு பாதகங்களைப்
பார்க்க ஆவல் கொண்டு
பகுத்தறிவில்லா மந்தி ~ இவர்
புரட்டுகிறாரோ
பத்திரிகையை........?

N.சுதன், கொக்குவில்.

### ஆசை

ஐந்தறிவு படைத்த உனக்கு
புரியாமொழிப் பத்திரிகை
பார்க்க இவ்வளவு ஆசையா?
இங்கே ஆறறிவு படைத்த ஜீவன்கள்
கல்வி கற்றும் மூடராய்.....

கஜஸ், இணுவில

# மௌனத்தின் தேடல்கள் - 69



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை மிகச் சிறிய கவிதைகளாக்கித் தபால் அட்டையில் வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

கிடைக்கவேண்டிய இறுதித் திகதி - 21.08.2005

அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 69
வலம்புரி - சங்குநாதம்
2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.




### பிரிவுத் துயர்

போகின்றாள் ஊரைவிட்டு பிரிவதற்கு மனமின்றி
ஜனனம் முதல் தவழ்ந்த மண்ணை அந்நியமாக்கிவிட்டு
திருமணம் எனும் நிர்ப்பந்த சிறையில் நிரந்தர கைதியாகி
போகின்றாள் ஊரைவிட்டு பிரிவதற்கு மனமின்றி

கிணற்றடித் தென்னை மரத்தை கிளைபடர்ந்த மாமரத்தை
வேனிற்கால வெம்மை தணித்து இதம் தந்த வேப்பமரத்தை
பாதையெங்கும் போய் வருகையில் பார்த்திருந்த பனைமரத்தை
மறந்தே போகின்றாள் மறக்கமுடியாமல்

முற்றத்து மல்லிகை முகம் கவிழ்ந்து மௌனிக்க
சுற்றிப் படர்ந்த முல்லைக்கொடி சுருண்டுபோய் நிலம் வீழ
மாடத்துத் துளசிச் செடி வாடிப்போய் வளமிழக்க
வீடு விட்டுப் போகின்றாள் விழிகள் மழை பொழிய



பப்படம் நொருங்கும் சத்தம் கேட்டு
பாய்ந்தோடி வரும் பஞ்சுப்பொதி பூனைக்குட்டியை
படலை திறக்கும் சத்தம் கேட்டு
குலைத்தபடி ஓடி வந்து வாலையாட்டும் பப்பிக் குட்டியை
'ம்பா' என்றழைத்தால் அம்மா என்றே
பதில் சொல்லும் கன்றுக் குட்டியை
பிரிந்தே செல்கின்றாள் பிரியமுள்ள ஜீவன்களை

பலூனுக்கும் பபிள்கம்மிற்கும் பண்டமாற்றாய்
முத்தம் தரும் பக்கத்து வீட்டு பாபுக் குட்டியை
பண்கார மருமகளுக்கு பயந்துபோய் தெரியாது
சுருட்டுக்கு நெருப்புக் கேட்கும் சுப்புத தாத்தாவை
பாழ்பட்ட யுத்தத்தில் பெற்ற மகளைப் பறிகொடுத்து
புத்தி பேதலித்து புலம்பித் திரியும் லட்சுமி மாமியை
இழந்தே போகின்றாள் இதயமுள்ள உறவுகளை

இத்தனையும் இழந்து ஓர் இல்லறம் தேவைதானா?
சொந்த மண்ணின் சுகம் வெளிநாடு தந்திடுமா?
விடை தெரியா வினாக்களுடன் விழிகள் கலங்கிடவே
போகின்றாள் ஊரைவிட்டு பிரிவதற்கு மனமின்றி.

பிரம்ம சாத்வி.

### என்னவளே!

நிலாப் பொழுதில்
உன்னோடு....
பழகிய நாட்கள்
இன்பத்தைத் தந்தாலும்
துன்பத்தை தந்துவிட்டது
சோதனைகள் பெரிதல்ல
வேதனைகள் தான்
அதிகமாகிக் கொள்கிறது
நிஜமாகிக் கொண்டிருந்த
காதல் நிழலாகிக்
கொள்கிறது
பாசத்தை தந்து
நேசத்தை வளர்த்து
பாதை காட்டிய நீயோ
இன்னொருவன் பாதையில்
உன் பயணம் தொடர்கிறது
ஆனால் - என் வாழ்வு
கண்ணீரின் பாதையில்
தள்ளாடிக்கொள்கிறது..

இன்பராஜ்,
மீசாலை.

### அமைதிப் பாடல்

கறபனை என்பது
கறுத்தப் பனை போன்றது
அதற்கு; ஒப்பனை செய்யலாம்
ஆனால்; ஓலை
வெட்ட முடியாது
என்ன யோசிக்கிறாய்?
எனக் கேட்டாய் நீ
என் எண்ணங்களை
எவ்வாறுதான் விளக்குவது
அழகிய பொய்களால்
அன்பை மறைத்தேன்
உன்னைப் பொறுத்தமட்டில்
அது கவிதை
எனக்கோ.. வாழ்க்கை
இரவில் தெரியும் நிலவை
முகில் கொண்டு போகும்
கலைந்த வட்டத்திற்குள்
வாழ்க்கை நடத்திய போது
பூச்சியத்திற்குள்
ராச்சியம் காணாதே என்றாய்
இப்போது வானம்
காணாத சிறைக்குள்
சிறகு முளைத்துக்
கிடக்கின்றேன்
நான் விரும்பும்
கானத்திற்காய்..

ஜோ.ஜெஸ்ரீன்.

### அழகு அழகு அழகு!

ஆடும் மயிலின் வண்ணத் தோகை அழகு
குலவையிடும் குயிலின் அமுதக் குரலும் அழகு
கொஞ்சி வரும் கிளியின் மொழி அழகு
சீறி வரும் சிங்கத்தின் சீற்றம் தனி அழகு
மருளும் மானிற்கு கண்கள் சிறப்பு அழகு
கவிபாடும் கவிஞனின் கவியும் அழகு
குழந்தைகளின் மழலைச் சொற்கள் ஓர் அழகு
மயக்கும் மங்கையரின் கூந்தலும் அழகு
துடிக்கும் காளையரின் தோள்களும் அழகு
முதுமையிலும் முதிராத அறிவும் ஓர் அழகு
சின்னச் சிங்காரி ரோஜாவின் சிரிப்பு அழகு
குண்டுத் தக்காளி குஷ்புவின் உதடு அழகு
சடுமியாய் நடந்துவரும் ரம்பாவின் நடை அழகு
மெல்ல நடந்துவரும் ரீனாவின் இடை அழகு
உலக மெல்லாம் அழகப்பா
உணர்ந்து நீயும் பாரப்பா......

வ.சிவாஜி, தேனூர்.

### அம்மா

அம்மா....
மூக்கும் வா முழியும் வாவென
எண்ணையிட்டெனை தடுக்கையிலே போட்டெடுத்து
காலையிளம் வெயிலில் 'ஒலிவ் ஓயில்' பூசி
சுவறப் பின் குளிப்பாட்டியவள்

'ஆ' காட்டி சோறூட்டி முழு நிலாவும் காட்டி
முகிழ்த்த பல கதையும் கூறி
ஏணைக்குள் போட்டு ஓராட்டியவள்



மார் மீதும் தோள் மீதும் அணைத்து
முத்தம் தந்து தந்து கண்ணான கண்ணுறங்கென
சுருதியிட்டெனைத் தூங்க வைத்தவள்

வண்ணமதாய் சட்டைபோட்டு வடிவும் பார்த்து
கண்ணூறு படாதிருக்கக்
கன்னத்திற் பெரிய பொட்டுமிட்டு
'ஒக்கலை'யில் கொண்டுலாத்தியவள்
தன் மடி மீதிருத்தியென்
ஆட்காட்டி விரலினால்
அரிசி மேற் கை பதித்து
ஆனாச் சொல்லித் தந்தவள்
ஈரேழு ஜென்மமெடுத்தாலும்
அவட்கிங்கு நான் பட்ட
கடன் தீரா - இற்றிக்கும்
எட்டா எத்திக்கும் என் அம்மா
புகழ் என்றும் ஓங்கட்டும்.

ஜெ.சுபாஜினி,
செம்மணி வீதி.

# ஆஷஸ் 3 வது டெஸ்ட் தொடரில் வலுவான நிலையில் இங்கிலாந்து

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்து வந்துள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.




இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்ற நிலையில் மூன்றாவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஒல்ட் டிராபோர்டில் நடைபெற்றது. முதல் இனனிங்சில் இங்கிலாந்து அணி 444 ஓட்டங்களை குவித்தது.

அடுத்து அவுஸ்திரேலிய அணி மூன்றாம் நாள ஆட்டநேர முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 264 ஓட்டங்களுடன் இருந்தது. அரைச்சதம் அடித்து அணியை பலோ - ஆனில் இருந்து மீடட வோன் 78, கிலஸ்பி 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


நான்காம் நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. இவ் ஆட்டத்திலும் வோனின் விளாசல் தொடர்ந்தது. சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப் பட்ட வோன், ஜோன்ஸ்சின் பந்தில் பவுண்ரி அடிக்க முயனறு விக்கெற்றை பறிகொடுத்தார். இவர் 122 பந்துகளைச் சந்தித்து 90 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து பிரட் லீ 1 ஓட்டத்துடனும், கிலஸ்பி 26 ஓட்டங்களுடனும் ஜோன்ஸ்சின் பந்து வீசசில் வெளியேறினர்.

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 302 ஓட்டங்களுடன் சகல விக்கெற்றுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜோன்ஸ் 53 ஒட்டங்களைக் கொடுத்து 6 விக்கெற்றுக்களை கைப்பற்றினார். இதுவே டெஸ்ட் போட்டியில் இவரது சிறப்பான பந்துவீச்சு ஆகும்.

142 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்சை துவக்கிய இங்கிலாந்து அணிக்கு டிரஸ் கோதிக், ஸ்டிராஸ் ஜோடி அபாரமான துவக்கம் அளித்தது. ஸ்டிராஸ் அபாரமாக துடுப்பெடுத்தாடி 106 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.



இதில் 9 பவுண்ரிகளும், 2 சிக்ஸர்களும் அடஙகும். டிரஸ் கோதிக் 41 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் மைக்கல் வோன் 14 ஓட்டங்களுடனும், பீற்றர்சன் ஓட்டங்கள் எடுக்காமலும ஆட்டமிழந்தனர். ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 4 விக்கெட் இழப்புக்கு 246 ஓட் டங்களை எடுத்திருந்தது.

இதேவேளை, இப்போட்டியில் டிரஸ் கோதிக் டெஸ்ட் போட்டியில் 5ஆயிரம் ஓட்டங்களைப் பெற்றுள்ளார். நேற்றுமுன்தினம் தனது 64 ஆவது டெஸ்டில் விளையாடிய இவர் பிரட்லீயின் ஓவரில் பவுண்ரி அடித்து இந்த மைல்கல்லை கடந்தார்.

இதன் மூலம் இங்கிலாந்து அணியில் 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 16ஆவது வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். (அ-19)

# ரோஜர்ஸ் இறுதிப் போட்டியில் அகாசி – ரபெல் மோதல்



முன்னணி வீரர்கள் மோதும் ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடர் கனடா நாட்டின் மொன்றியல் நகரில் நடைபெற்றுவருகிறது. அரையிறுதிப் போட்டிகள் கடந்த 13 ஆம் திகதி நடந்தன. 35 வயது சீனியர் வீரரான, அமெரிக்காவின் அகாசி 64, 64 என்ற சுலப செட்களில் பிரிட்டன் வீரர் கிரெக் ருசெட்ஸ்கியை வென்றார.

மற்றொரு அரையிறுதியில 19 வயது இளம்வீரரான ஸ்பெயின் நாட்டின் ரபெல் நடால் 64, 7-5 என்ற செட்களில் பிரான்ஸ் வீரர் ஹெனறி மெத்யூவை வீழ்த்தினார். இறுதிப்போட்டியில் அகாசி, ரபெல் சந்திப்பதால், போட்டி எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

ஒருவர் அனுபவம் வாய்ந்த சீனியர் வீரர். இவர் கடந்த காலத்தில் சாதனைகளைக் குவித்தவர். மற்றவர் இளம் யூனியர் வீரர். இவர் எதிர் காலத்தில் சாதிக்கக் காத்திருப்பவர். யார் இறுதியில் சாதிக்கப போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே எழுந்துளளது. (அ-19)

## உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி

# ஒரே தொடரில் இரு பிரிவுகளிலும் தங்கம் வென்ற டிருனேஷ்டி பாபா




(யாழ்ப்பாணம்)

உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் டிருனேஸ் டி பாபா ஜயாயிரம், பத்தாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தங்கம் வென்று புதியசாதனை படைத்துள்ளார்.

முன்னணி வீர, வீராங்கனைகள் பங்கேற்கும் உலக தடகள சம்பியன்ஷிப் தொடர் பின்லாந்தின் ஹெல்சின்கி நகரில் நடைபெற்று வருகிறது.

பெண்களுக்கான ஜயாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டிகள் கடந்த 13ஆம் திகதி நடைபெற்றன.

இதில் எதியோப்பியாவின் 19 வயதான டிருனேஷ் டி பாபா 14 நிமிடம் 38.59 வினாடிகளில் கடந்து முதலிடம் பெற்றுள்ளார்.

முன்னதாக இவர் பத்தாயிரம் மீற்றா ஓட்டப் போட்டியிலும் தங்கம் வென்றுள்ளார்.

இதன் மூலம் ஒரே தொடரில் இரு பிரிவுகளிலும் தங்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற புதிய சாதனை படைத்துள்ளார். (அ-19)

# சிம்பாபேயில் டெண்டுல்கர் விளையாடுவாரா?



டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்ட டெணடுல்கர் விளையாடுவதற்கு தகுதியானவரா என்பதை குறித்து உடல் பரிசோதனை நடத்தப் படுகிறது.

சிம்பாபே நாட்டில் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் முத்தரப்பு கிரிக்கெட் போட்டி நடைபெறவிருக்கிறது.

இதில் கலந்துகொண்டு விளையாடுவதற்காக இந்திய கிரிக்கெட் அணி எதிர்வரும் 22ஆம் திகதி புறப்படுகிறது. அங்கு இந்திய அணி முத்தரப்பு போட்டி மற்றும் 2 டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளது.

இதற்கான இந்திய அணி கடந்த 13ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. முழஙகைக் காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்து ஓய்வு எடுத்துவரும் டெண்டுல்கர் செப்டெம்பர் மாதம் நடுப்பகுதியில் தொடங்கும் சிம்பாபேயுடனான டெஸ்ட தொடருக்கு சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆனாலும் டெண்டுல்கர் இப்போட்டியில் விளையாடுவாரா என்பதில் சந்தேகம் நீடிக்கிறது.

சமீபத்தில் நடந்து முடிந்த இலங்கை முத்தரப்புப் போட்டியில் பங்கேற்காத டெண்டுல்கர் உடலியக்க நிபுணர் ஜான் குளோஸ்டர் அளித்த அறிக்கையின் அடிப்படையில் தற்போது சேர்ககப்பட்டுள்ளார்.

முத்தரப்பு இறுதிப் போட்டிக்கு முன்னதாக டெண்டுல்கரின உடல் தகுதி குறித்து ஆய்வு செய்யப்படும். அவருக்கு உடல் பரிசோதனையும் முழுமையாக நடத்தப்படும். அதில் அவர் தகுதி பெற்றால மட்டுமே விளையாடுவார். தகுதி பெறாத பட்சத்தில் அவருக்குப் பதிலாக வேறு ஒரு வீரர் சேர்க்கப்படுவார் என இந்திய வாரிய செயலாளர் எஸ்கே. நாயர் தெரிவித்தார்.

ஒருநாள் போட்டிக்கான அணியில் இருந்து லக்ஸ்மன், கும்ப்ளே, பாலாஜி, ஜகீர்கான் ஆகியோா நீக்கப்பட்டுள்ளனர். அதேசமயம் டெஸ்ட தொடரில் நால்வரும் இடம்பெற்றுள்ளனர்.

ஒருநாள் அணியில் 19 வயதான உத்திரப பிரதேச வீரர் ருத்ர பிரதாப் என்ற புதுமுகத்துக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. ரெய்னா, வேணு கோபால்ராவ் ஆகியோரும் வாய்ப்புப் பெற்ற உள்ளனர். அகர்கர், முரளி கார்த்திக் திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர்.

டெஸ்ட் அணிக்கு தினேஷ் கார்த்திக்கும் ஒருநாள் அணிக்கு டோனியும் கீப்பராக தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்திய அணி வருகிற 22ஆம் திகதி மும் பையில் இருந்து சிம்பாப்பே புறப்பட்டு செல்கிறது. (அ-19)

# மான்செஸ்டர் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)




இங்கிலீஷ் பிரிமியர் லக் கால்பந்து தொடரில் மான்செஸடர் அணி வெர்டர் கிளப்பை வெற்றி கண்டுள்ளது.

முன்னணி கிளப் அணிகள் மோதும் இங்கிலீஷ் பிரிமியர் லக் கால்பந்துத தொடர் இங்கிலாந்தின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்று வருகிறது. கடந்த 13ஆம் திகதி லவர் பூல் நகரில் நடந்த போட்டியில் மான் செஸ்டர்யுனைடெட், வெர்டன் அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியல் மான்செஸ்டர் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. நட்சத்திர வீரர்களான வான் நிஸ்டல்ராய், ரூனே தலா ஒரு கோல் அடித்தனர்.

சம்பியன்ஸ் லீக் கோப்பை வென்ற லீவர் பூல் அணி மிடில்ஸ்பிரோவை சமன் செய்தது. இப் போட்டியில் இரு அணிகளும் கோல் ஏதும் அடிக்கவில்லை. (து-19)













வடக்கு – கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாவட்டங்களுக்கிடையிலான மாகாண மட்ட தடகளப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இறுதிநாள் நடைபெற்ற போட்டிகளின் காட்சிகளையும், பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்ட விருந்தினர்களையும், சகல தடகளப் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ். மாவட்ட அணிக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். மோகனதாஸ் கேடயத்தை வழங்குவதையும், போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீராங்கனைகளுக்கு பதக்கமும் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: ஞா. ஜங்கரன்)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 35

பி.ஜே.ராஜய்யா

## எங்கும் சதாம்! எதிலும் சதாம்!

அப்போது எனக்கு பதினைந்து வயது இருக்கும் வசதியான குடும்பத்துப் பிள்ளை கள் மட்டுமே சேரக்கூடிய பாக்தாத் கல்லூரி ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். வழக்கமான பாடங்களோடு வாரத்துக்கு இரண்டு மணிநேரம் எங்க ளுக்கு ஓவியப் பாடம் நடத்தப்பட்டது. அந்த இரண்டு மணி நேரம்தான் எனக்கு மிகவும் பிடித்தமானது.


போர் நினைவுச் சின்னத்தில் சதாமின் கை


தன் ஓவியங்களைப் பார்வையிடும் சதாம்

ஏனென்றால் ஓவியம் வரைவதில் எனக்கு அளவு கடந்த ஆர்வம். நானும் வேறு சில மாணவர்களும் அழகழகாய் படம் வரைவதைப் பார்த்து உற்சாகமடைந்த எங்கள் ஓவிய ஆசிரியர், பள்ளியிலேயே ஓர் ஓவியக் கண் காட்சிக்கு ஏற்பாடு செய்துவிட்டார். நாங்கள் வரைந்த அருமை யான ஓவியங்கள் அந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டன. வட ஈராக்கிலுள்ள குர்திஸ்கான் பிரதேசத்து எழில் கொஞ்சும் இயற்கைக் காட்சியை நான் ஓவியமாகத் தீட்டியிருந்தேன். அந்த ஓவியத்துக்கு முதல் பரிசு கிடைத்தது. இக் காண்காட்சி முடிந்ததும் என்னுடன் படிக்கும் சக மாணவன் ஒருவன் என்னி டம் வந்தான். அவன் ரொம்ப பெரிய இடத்துப் பிள்ளை. அவ னைக் கண்டால் எனக்குள் ஓர் இனம்புரியாத அச்சம் ஏற்படும். அதனால் அவனிடம் அதிக பழக்கம் வைத்துக்கொள்ளாமல் சற்று விலகியே இருப்பேன். இப்போது அவனே வலியவந்து பேசினான்...

"நீ எனக்கொரு படம் வரைஞ்சு குடுக்கணும்"

"என்ன படம்?"

"எங்க அப்பா படம்!"

அதிர்ச்சி கலந்த ஆச்சரியம் எனக்கு. "உங்க அப்பா படமா?" படபடப்புடன் கேட்டேன்.

"ஆமாம்! நீ வரைஞ்சிக் கொடுத்தா அதைக் கொண்டுபோய் அப்பாகிட்ட காட்டுவேன்"

"எனக்கு ஒரே பரபரப்பு. அந்தப் பெரிய இடத்துப் பிள்ளையின் அப்பா தன்னை படம் வரைவதற்கென்று தனியாகப் பதினைந்துக்கு மேற்பட்ட பிரபல ஓவியர்களை வைத்திருக் கிறார்.


தவிர, ஈராக்கிலுள்ள ஒவ்வொரு ஓவியனும் தனக்கு அந்த வாய்ப்பு கிடைக்காதா என தவம் கிடக்கிறான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியிருக்கையில் எனக்கு இப்படியொரு அதிர்ஷ்டமா?

என் சம்மதத்திற்கு காத்திருக்காமல் அந்தப் பெரிய இடத்துப்பிள்ளை விளையாட்டு மைதானத்தில் நிறுத்தப்பட்டிருந்த தன் காருக்குச் சென்று அதிலிருந்த சில புகைப்படங் களை எடுத்து வந்து என்னிடம் கொடுத்தான.எல்லாம் அவனது அப்பாவின் புகைப் படங்கள்...

"எனக்கு நாலு நாள் டைம் வேணும்" என்றேன்.

சரியென்று தலையசைத்துவிட்டு அவன் போய்விட்டான்.

"மூன்று நாட்கள் மிகுந்த சிரத்தையுடன் அந்த ஓவியத்தை வரைந்து முடித்தேன். நான்கா



வது நாள் அந்தப் பெரிய இடத்துப் பிள்ளையிடம் கொண்டுபோய் கொடுத்தேன். ஓவியத்தைப் பார்த்து விட்டு "ரொம்ப நல்லா இருக்கு" என்று தட்டிக்கொடுத்தான். "இதைப் பார்த்தா எங்க அப்பா சந் தோஷப்படுவார்."

இப்படி தன் அனுபவத்தை நினைவு கூர்ந்திருப்பவர் லத்தீஃப் யாஹியா. அவர் குறிப்பிடும் அந்தப் பெரிய இடத்துப்பிள்ளை, அதிபர் சதாம் உசேனின் மூத்த மகன் உதே உசேன். பிற்காலத்தில் எதிரி களால் உதே உசேன் உயிருக்கு ஆபத்து என்ற நிலை ஏற் பட்டபோது நிர்ப்பந்தத்தின் பேரில் டூப் உதே உசேனாக கட்டாயப் பணியில் அமர்த்தப்பட்டு சித்திரவதைக்குள்ளானவர் இந்த லத்தீஃப் யாஹியா.

லத்தீஃப் யாஹியா என்றில்லை. யார் தன்னை அழகாக வரைந் தாலும் அதைப் பார்த்து குழந்தை போல் குதூகலிப்பது சதாமின் இயல்பு. அதனால்தான் அவரது ஆட்சிக் காலத்தில் ஈராக்கின் ஒவ் வொரு தெருமுனையிலும், ஒவ்வொரு அரசாங்கக் கட்டடத்தின் உள்ளும் புறமும் சதாமின் ஏராளமான ஓவியங்கள், புகைப்படங்கள் பெரிது பெரிதாய் வைக்கப்பட்டிருந்தன. நகரத்து ரவுண்டானாக்களில் மட்டுமல்ல, புழுதி பறக்கும் குக்கிரா மத்து முச்சந்திகளிலும் சதாம் சிலைகள் நிறுவப்பட்டிருந்தன.

சுருக்கமாகச் சொன்னால், நீங்கள் ஈராக்கின் எந்த மூலையிலிருந்தாலும் சதாம் உங் களைப் பார்த்துக் கொண்டிருப்பார். ஓவியமாக,புகைப்படமாக அல்லது சிலையாக...!

இதற்குப் பின்னால் புதைந்திருக்கும் அர்த்தமும் இதுதான். சதாமுக்குத் தெரியாது என்ற நினைப்பில் அவருக்கு எதிராக முணுமுணுக்கவோ, வெறுக்கவோ செய்யாதீர்கள். சதாம் உங்களை கவனித்துக் கொண்டு தான் இருக்கிறார்... தனது உளவுப்படையினர் மூலம்!.

வெவ்வேறு கெட்-அப்களில் புகைப்படம் எடுத்துக்கொள்வதில் சதாமுக்கு அலாதிப் பிரியம்.

அவர் அதிபராய் பதவி வகித்த இருபத்தி நான்கு ஆண்டுகாலமும் அவரது பெரும்பாலான புகைப்படங்களை எடுத்தவர் ஒரே நபர்தான்.பெயர் உசேன் முகமது அலி. சதாம் எந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டாலும் இந்த புகைப்படக்காரர் தவறாமல் அங்கு ஆஜராகி விடுவார். புதிதாய் எடுத்த புகைப்படங்கள் சகிதம் அவர் தினமும் மதியம் சதாமை சந்திப்பார். சதாம் பார்த்து தேர்வுசெய்த புகைப்படங்களை மட்டுமே பிரதிகள் எடுத்து செய்தித் துறைக்கு அனுப்பு வார். அவை அங்கிருந்து பத்திரிகை அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

முதல் பக்கத்தில் சதாம் படம் இல்லாமல் எந்தப் பத்திரிகையும் வெளிவரக்கூடாது என்று எழுதப்படாத உத்தரவு கண்டிப்புடன் அமுல் செய்யப்பட்டது. சதாம் புதிய நிகழ்ச்சி யில் கலந்துகொள்ளாத நாட்களில் அவரது பழைய புகைப்படங்கள் முதல் பக்கத்தில் இடம்பெற்றன. சதாம் ஆதரவுப் பத்திரிகைகள் மட்டுமே வெளியிட ஈராக்கில் அனுமதிக்கப்பட் டிருந்ததால், பத்திரிகைச் சுதந்திரம் பற்றி பேச அங்கு நாதியில்லை.

இதைவிட பெருங்கொடுமை என்னவென்றால், ஈராக் தொலைக்காட்சி சதா சர்வகால மும் அது சதாம் அரசின் சாதனைகளை ஒளிபரப்பிக்கொண்டிருந்தது. அதுமட்டுமல்ல, செய்தி வாசிக்கும் போதெல்லாம் சதாமை இந்திரன், சந்திரன், வீரர், தீரர் என்கிற ரீதியில் புகழும் பாடலை ஒளிபரப்பிய பிறகுதான் செய்தி வெளியிடப்பட்டது.

எங்கும் சதாம், எதிலும் சதாம் என்ற அவலம் அவரை சுயமோகியாகவும், தனிமனித வழிபாட்டை ஈராக்கியர் மீது திணித்த கலாசார ஒடுக்குமுறையாளராகவும் மேற்கத்திய அறிஞர்களுக்கு அடையாளம் காட்டியது.

அவர் நிறுவிய ஈரான் -ஈராக் போர் நினைவுச் சின்னம் தான் இந்த அவலத்தின் உச்சம். ஒரு கை வாளேந்தி இன்னொருவாளோடு போரிடுகிற மாதிரி இச் சின்னம் வடிவமைக்கப்பட் டிருக்கிறது.

அந்தக் கையை உருவாக்க மாடலாக பயன்படுத்தப்பட்டது யாருடைய கை என்று நினைக் கிறீர்கள்? சதாம் கைதான்.


இப்படி ஈரான்-ஈராக் போர் ஓய்ந்ததும் உள்நாட்டுப் பிரச்சினைகளை ஒருபக்கம் இமேஜை வைத்து சமாளித்துக் கொண்டே இன்னொரு பக்கம் அடுத்த போருக்கான தயாரிப்பு வேலை யில் இறங்கினார் சதாம்...

அவரது அடுத்த குறி குவைத் அல்ல... இஸ்ரேல்.

(தொடரும்)

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று ஏழாம் திருவிழா



## துணையிருப்பான் முருகன்

மயிலேறி விளையாடி வருவான் முருகன்
மனதார நினைப்போர்க்கு அருள்வான் முருகன்
இருளகற்றி ஒளியேற்றி வைப்பான் முருகன்
இல்லங்கள் யாவிலுமே இருப்பான் முருகன்
தீராத வினைகளினைத் தீர்ப்பான் முருகன்
தமிழிற்கும் தமிழர்க்கும் துணையிருப்பான்
முருகன்

*மு.முத்துக்குமார்*

## அழகுக் கோலம் காண்கின்றேன்

அழகுத் தெய்வம் அசைந்துவரும்
அலங்காரக் கோலத்தை
பழகு தமிழில் பாட்டெழுதி
பணிந்துபாடி நிற்கின்றேன்
உலகு வாழ அருளும் தெய்வம்
ஊரில் வரும் கோலத்தை
நிலவு போல எண்ணியிங்கு
நெஞ்சு நிறைந்து நிற்கின்றேன்

*அருளனுசூயா*

## நல்லூரான் புகழ் பாடுவோம்

நாளும் நல்லூரை வலம்வந்தே
நல்லூரான் புகழ் பாடுவோம்!
வாழும் உரிமைபெற வலம்வந்தே
வண்ணமயில் வாகனன் புகழ் பாடுவோம்!
நீளும் போர் நிறுத்த வலம்வந்தே
நிமலன் அருள்தேடி புகழ் பாடுவோம்!
ஆளும் உரிமைபெற வலம்வந்தே
அப்பன் நல்லூரர்ன் புகழ்பாடுவோம்!

*சங்குநாதன்*

## நல்வரந்தாராய்

கோலமயில் மீதிலெழும் கோபுரமே கந்தா
தேவரது வினைதீர்த்த தேச எழில்க்குமரா
ஆடலுடன் பாடியருள் நாடிவரும் பக்தர்
மாடமதில் கூடலமாய் தேடுகின்றார் அங்கே
சூழபெரும் தீப ஒளி சுந்தரமே கந்தா
சுகமான வாழ்வு தந்திடுவாய் வேலா

*சுகந்தினி முருகேசு*

## சுகித்திட வழி சமைப்பாய்

முப்புரம் எரித்தோன் மைந்தா!
முழுமதி யன்ன கந்தா!
இப்புவி யாளும் காட்சி
இணையிலா துந்தன் மாட்சி!
செப்பவே உள்ளம் துள்ளும்
செபிக்கவே நெஞ்சை யள்ளும்
சுப்பிர மணியா நாளும்
சுகித்திட வழி சமைப்பாய்!

*கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்*

## வேலின் மகிமை

அபயமளிப்பது வேல் ஆறுதல் தருவது வேல்
இச்சை தீர்ப்பது வேல் ஈஸ்வரி உகந்தது வேல்
உலகரின் மருகனில் வேல் ஊரைக் காத்திடும் வேல்
எங்களைக் காப்பதுவேல் ஏற்றம் தருவது வேல்
ஐங்கரன் தம்பியின் வேல் ஒய்யாரமானது வேல்
ஓங்காரமானது வேல் ஔவியமற்றது வேல்

*மு.விக்னேஸ்வரன்*

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் - குறள்

வலம்புரி

## யாழ்.பொலிஸாரின் நடமாட்டம் அச்சம் தருகிறது

இணுவில் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் நடமாட்டம் அச்சம் தருவதாக அமைந்துள்ளது.

யாழ்.பிராந்திய பொலிஸ் அத்தியட்சகராக இருந்த சாள்ஸ் விஜயவர்த்தன கடந்த 04.08.2005 தகதி இணுவில் பகுதியில் வைத்து கடத்தப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து அரச கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கான காரணம், அதனை அமுல்படுத்தியதால் பாதுகாப்புத்தரப்பில் ஏற்பட்ட அனுகூலம் பற்றி இதுவரை எதுவும் தெரியாததாயினும், நீண்டகாலத்திற்குப்பின்னர் திடீரெனப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவினால், மக்கள் மத்தியில் பயப்பீதி ஏற்பட்டமை உண்மையானதே.

இந்நிலையில், யாழ்.பிராந்திய பொலிஸ் அத்தியட்சகரின் மரணம் தொடர்பான விசாரணைகளுக்காக பொலிஸ்மா அதிபர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பொலிஸ்மா அதிபர், சிவில் விவகாரங்களில் பொலிஸார் ஈடுபடுவதில் கட்டுப்பாடு விதித்திருந்தார்.

இக்கட்டுப்பாடு உத்தியோகபூர்வமானதாக இல்லாவிடினும் பொலிஸார் அதனைக் கடைப்பிடித்ததனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

அரச கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருப்பதாக கூறிக்கொண்டு–நீதிபரிபாலன சட்டமூலங்களை அமுல்படுத்திக்கொண்டும் இருக்கின்றபோது சிவில் நடவடிக்கைகளில் பொலிஸார் தலையிடுவதில் தாமதங்கள் ஏற்பட்டால் அதனால் வரும் கஷ்ரங்களை எதிர்நோக்குபவர்கள் பொதுமக்களே என்பது உணரப்படவேண்டியதொன்றாகும்.

நிலைமை இவ்வாறு இருக்கின்ற போது யாழ்ப்பாணப்பிராந்தியத்தில் பொலிஸாரின் நடமாட்டம் வழமைக்கு மாறானதாக இருப்பது கண்டு மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

அதாவது, முன்னர் சந்திகளில் இரண்டு மூன்று பொலிஸார் தரித்து நின்று சோதனைகளை நடத்தியிருந்தனர் – ஆனால் தற்போது பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையில் அதிகளவான பொலிஸார் ஈடுபட்டிருப்பதுடன் இராணுவமும் அவர்களுடன் இணைந் திருப்பது நிலைமை அவ்வளவு நல்லதாக இல்லை என்ற உணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத் தியுள்ளது.

பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு காரணம் பொலிஸாரின் பாதுகாப்பு என்ற பதிலை, பாதுகாப்பு வட்டாரங்கள் முன்வைத்தாலும், அதனது வெளிப்படையான தாக்கம் என்ன? என்பதை உடனடியாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

அதாவது, பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து கூட்டாக நடத்தும் ரோந்து நடவடிக்கைகள் எந்த நேரத்திலும் ஏதுவும் நடக்கலாம் என்பதையோ – அல்லது இணுவில் சம்பவம் போன்று ஏதேனும் நடந்தால் பொலிஸார் யார் என்பதை நிரூபிக்க காத்திருக்கின்றார்கள் என்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதாக உள்ளது.

எனவே பயப்பீதியை ஏற்படுத்தும் வகையிலான ரோந்து நடவடிக்கைகளை பொலிஸார் தவிர்ப்பது எல்லோருக்கும் நன்மையாக அமையும்.

# வெளிநாடுகளில் வாழும் நம் மக்களின் வளங்களை நாம் உரியமுறையில் பயன்படுத்தவேண்டும்

## வழிகாட்டல் கருத்தரங்கில் பொறியியலாளர் வே.சிவபாதசுந்தரம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றைய நிலையில் உலகம் மிக மிக வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றது. இந்த் வேகத்துக்கு ஏற்ற வகையில் தான் நாம் எமது பிரதேசத்தின் புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி சார்ந்த துறைகளை அபிவிருத்தி செய்ய மிகவும் திட்டமிட்ட முறையில் செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு அனைத்து வழிகளிலும் கைகொடுத்து ஆதரவு வழங்க ஐக்கிய இராச்சியத்திலுள்ள தென்மராட்சிப் பிரதேசத்தவர்கள் இப்போது முன்வந்துள்ளனர்.

ஐக்கிய இராச்சியத்திலுள்ள தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் தலைவரான பொறியியலாளர் கலாநிதி வேலுப்பிள்ளை சிவபாதசுந்தரம் கடந்த சனியன்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கத்தின் ஆதரவில் நடாத்தப்பட்ட வழிகாட்டல் கருத்தரங்கில் சிறப்புரையாற்றும் போது இவ்வாறு தொவித்தார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இவ் வழிகாட்டல் கருத்தரங்கில் பிரதேசத்தில் இருக்கின்ற பாடசாலைகளின் அதிபர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச நலன்விரும்பிகள் எனப்பலர் பங்குபற்றியிருந்தனர்.

பொறியியலாளர் கலாநிதி சிவபாதசுந்தரம் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

அபிவிருத்தி என்பது பல கோணங்களில் அமைய வேண்டும். அவ்வகையில் தான் யுத்தத்தினால் சீரழிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தினை சமுதாயம், பொருளாதாரம், கல்வி, உயர்கல்வி மற்றும் சுகாதாரம் எனும் ஐந்து கோணங்களில் அபிவிருத்தி செய்வதற்கு தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் நல்லமுறையில் திட்டமிட்டுள்ளது. உலகத்தில் இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்ப நாமும் எமது செயல்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற தென்மராட்சிப் பிரதேசத்தவர்கள் மத்தியில் பல்வேறு வகைப்பட்ட திறன்கள் இருக்கின்றன. அவற்றினை நாம் உரிய முறையில் பயன்படுத்தி எமது பிரதேசத்தின் புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கும் பயன்படுத்த வேண்டும்.

எமது பிரதேசத்தில் கல்விகற்று வாழத்துடிக்கின்ற இளைஞர்-யுவதிகளின் எதிர்காலத்துக்கு வளம்சேர்க்க நாம் திட்டமிட்டவகையில் வழிகாட்ட வேண்டும். அதன் மூலம் ஒரு பலமிக்க சமுதாயத்தை உருவாக்கவேண்டியது எமது தலையாய கடமையாகும்.

அதேசமயம, மாற்றம் பெற்றுவரும் உலகிற்கு ஏற்ப, நாமும எமது கல்வித்திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவரல் வேண்டும். அறுபதுகளில் ஜனரஞ்சகமாக்கப்பட்ட கல்வி இன்றைய நிலையில் தொழில் சந்தையில் போட்டி போடக்கூடிய நிலைகது மாறியுள்ளது. தொழில்சாா கல்வியானது எமது மாணவர்களிடையே விரும்பத்தக்க வரவேற்பைப் பெறவில்லை என்றே கூறவேண்டியுள்ளது.

எனவே யுத்தத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்ப அனைத்து வழிகளிலும் முயலவேண்டும். இந்த வகையில் வெளிநாடுகளில் வாழ்கின்ற தென்மராட்சிப் பிரதேச மக்களிடம் காணப்படுகின்ற திறன்கள், அனுபவங்கள் மற்றும் ஆற்றல்களை நாம் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். அதன்மூலம் எமது பிரதேசத்தினை ஒரு முன்மாதிரியான பிரதேசமாகக் கட்டியெழுப்பலாம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

### பேராசிரியர் க.கந்தசாமி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதிகவியல் பேராசிரியரும் தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கத்தின் தலைவருமான பேராசிரியர் க.கந்தசாமி அங்கு உரையாற்றும்போது,

உலக பொருளாதார வளர்ச்சியானது ஆரம்பகாலத்தில் விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆயினும் தற்போதைய நிலையில் எமது பிரசேத்தின் வளர்சசியானது அறிவுசாா அபிவிருத்தியாக பரிணாமம் பெற்றுள்ளது. எமது பிரதேசத்தில் தொழில்நுட்பக்கல்வியை அடிப்படையாகக் கொண்ட கல்வி மேம்பாட்டினை நாம் மேம்படுத்த வேண்டும். இந்த வகையில இந்தியா ஒரு நல்ல முன் உதாரணமாகும்.

மேலும், எந்தவொரு தொழிலையும் நாம் முன்னேற்ற வேண்டுமாயின் அவை சார்ந்த விஞ்ஞான தொழில்நுட்ப அறிவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன், சிறிய அளவில் ஆரம்பிக்கப்படும் குடிசைக் கைத்தொழில்கள் தான் வளர்ச்சிபெற்று பெரும் தொழிற்சாலைகளாக வளர்கின்றன. இந்தவகையில் எமது பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய வளங்களை மூலதனமாகக் கொண்டு தொழில்களை நாம் உருவாக்கப் பாடுபடவேண்டும் என்று கூறினார்.

### செல்வி கிருபா வீரசிங்கம்

தென்மராட்சி கல்வி வலய உதவிப் பணிப்பாளர் செல்வி கிருபா வீரசிங்கம் அங்கு உரையாற்றும்போது,

எமது பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்கள் அடுத்து என்ன செய்வது எனத் தெரியாமல் இருந்து வருகின்றனர். சரியான வழிகாட்டிகள் இல்லாமை பெரும் பின்னடைவாகும். இத்தகையவர்கள் தமது பெறுமதியான பொழுதினை வீணே கழித்து வருகின்றனர். எமது இளைஞர்- யுவதிகளின் சக்தியையும், ஆற்றல்களையும் சரியான வகையில் பயன்படுத்த வேண்டும்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆங்கிலக்கல்வி நலிவுபெற்ற நிலையில்தான் இருக்கின்றது. ஆங்கிலக் கல்வியை மேம்படுத்த உரிய-நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என்றார்.

மேலும இக்கருத்தரங்கில் அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம், சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்கள் இ.கயிலநாதன், பூ.வெற்றிவேலு ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினர்.

தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கத்தின் செயலாளர் யோ.ஜெயக்குமார் நன்றியுரை வழங்கினார். (அ-16)

# ஐக்கிய இராச்சியத்தில் வாழும் தென்மராட்சி மக்களால் தென்மராட்சி அபிவிருத்திச்சங்கம் அங்குரார்ப்பணம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தினை திட்டமிட்ட முறையில் சமூக, பொருளாதார, கல்வி, சுகாதாரம் மற்றும் உயர் கல்வித்துறைகளில் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஐக்கிய இராச்சியத்திலுள்ள தென்மராட்சிப் பிரதேசத்தவர்கள் ஒன்றிணைந்து தென்மராட்சி அபிவிருத்திக்கழகம் ஒன்றினை அண்மையில அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

இக் கழகததினா் தென்மராட்சியின் புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் அபவிருத்தி சார்ந்த திட்டங்களை எதிர்வரும் புத்தாண்டுகளில் அமுல்செய்யவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இது தொடர்பான ஆரம்ப பணிகளை முன்னெடுக்கும் பொருட்டு தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் தலைவரான பொறியியலாளர் கலாநிதி வேலுப்பிள்ளை சிவபாதசுந்தரம் மற்றும கழக உறுப்பினர் எஸ்.சத்தியமூர்த்தி ஆகியோர் தென்மராட்சிக்கு வந்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் அபிவிருத்திக்கழகம் எதிர்காலத்தில் செய்யக்கூடிய திட்டங்கள் தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் மற்றும் உயர் அதிகாரிகளையும் இக்கழகத்தினர் சந்தித்து உரையாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய சமூக, சுகாதார நல அமைப்புக்களின் செயல்திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கவும் இக்கழகத்தினர் முன்வந்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது. (அ-16)

## வடபிராந்திய முகாமையாளராக துரைசிங்கம் ரகு பதவி உயர்வு

மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளராக துரைசிங்கம் ரகு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இதுவரை காலமும் மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளராகப் பதவிவகித்த இவர் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக்கிளை, சாவகச்சேரிக்கிளை ஆகியவற்றில் முகாமையாளராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவரை மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்களும், ஊழியர்களும் மலர்மாலைகள் அணிவித்துக் கௌரவித்தனா்.(அ-16)

## ரயிலில் பயணச்சீட்டு இன்றி பயணிப்போர் மீது கடும் நடவடிக்கை

பயணச் சீட்டு இன்றி ரயில்களில் பயணிப்போரை கண்டுபிடிப்பதற்கான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே பாதுகாப்பு அத்தியட்சகர் சுனிமல் அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ரயில்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின் போது பயணச் சீட்டின்றி பயணம் செய்த சுமார் 200பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

பயணச்சீட்டின்றி பயணிக்கும் ஒருவருக்கு அபராதமாக 500 ரூபாவும், ரயில் புறப்பட்ட இடத்தில் இருந்து பயணத்தை முடிக்கும் இடம்வரையிலான கட்டணமும் அபராதமாக விதிக்கப்படும். அபராததகைச் செலுத்தத் தவறுவோர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-9)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

மூட நம்பிக்கைக்கு முழந்தாளிடுவதும் உங்கள மனதிற்கே உங்களை விற்று விடுவதுமாகிய இது எனது ஆன்மாவாகிய உங்களுக்குத் தகாது. நீங்கள் எல்லையற்றவர்கள். மரணமற்றவர்கள். பிறப்பற்றவர்கள். நீங்கள் அளவு கடந்த ஆன்மா ஆதலால் அடிமையாயிருப்பது உங்களுக்குப் பொருந்தாது. எழுந்திருங்கள். விழித்துக்கொள்ளுங்கள். எழுந்து நின்று போர் புரியுங்கள்.


சுவாமி விவேகானந்தர்




அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு நோர்வேக் குழுவினர் அஞ்சலி செலுத்துவதையும், அவரது உடல் சுதந்திர சதுக்கத் தைநோக்கி எடுத்துச் செல்லப்படுவதையும் படங்களில் காணலாம்



கதிர்காமரின் மனைவி, பிள்ளைகள்



ஆறுதல் கூறும் ஜனாதிபதி சந்திரிகா

## வடக்குக் கிழக்கில்

# 500 ஆங்கில ஆசிரியர்களுக்கு ஒக்.15ற்கு முன் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்கள் அனைவருக்கும் ஒக்டோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனத்தினை வழங்க நடவடிக்கையெடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கல்வியமைச்சின் அதிகாரிகளை பணித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் விசாகலிங்கம் இதனைத்தெரிவித்தார். கடந்த வாரம் பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் வடக்கு கிழக்கின் கல்விப்பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக நடாத்தப்பட்ட கூட்டத்திலேயே ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 230 ஆங்கில ஆசிரியர்களுக்கு சமீபத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. இன்னும் 500 பேர்வரை எஞ்சியிருக்கின்றனர். அவர்களுக்கு ஒக்டோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

# கொலை தொடர்பாக நேற்றுவரை 45பேர்கைது

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இதுவரை 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது 28பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பம்பலப்பிட்டியில் 5, தெகிவளையில்2, களனியில் 3, வெள்ளவத்தையில் 4, முகத்துவாரத்தில் 5,புறக்கோட்டையில் 2, கிராண்பாஸில் 3, மருதானையில் 7, வத்தளையில் 2, கொட்டாஞ்சேனையில் 7 மற்றும் கோட்டையில் 5பேர் சந்தேகத்தின்பேரில் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அமைச்சரின் கொலை தொடர்பில் 150பேரின் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன. எனினும் இதுவரை உறுதியான தகவல்கள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

# புலிகளுக்கும் சண்டேரைம்ஸிற்கும் நேரடித்தொடர்புண்டு-மங்கள

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் சண்டேரைம்ஸ் பத்திரிகைக்கும் இடையே நேரடித் தொடர்பு இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சரின் கொலை விவகாரத்தில் இது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் விமானத்துறை மற்றும் துறைமுக அதிகார சபை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஊடகம் ஒன்றிற்கு தொலைபேசி வாயிலாக வழங்கிய பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சரின் பாதுகாப்பு ஏற்பாடுகளை பகிரங்கப்படுத்தியதில் இந்தப் பத்திரிகைக்கு பெரும் பங்குண்டு என்றும் தெரிவித்துள்ளார்.

சண்டேரைம்ஸ் பத்திரிகை கடந்த காலத்தில் சில சம்பவங்கள் மற்றும் இடங்கள் பற்றி எழுதிய அடுத்த கணமே அவற்றை விடுதலைப்புலிகள் தாக்கியழித்திருந்தார்கள்.

தற்சமயம் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரை அவமதிக்கும் வகையிலான செய்திகளை வெளியிட்டிருந்ததுடன் அவரது புல்லர்ஸ் வீதி இல்லம் தொடர்பான செய்திகளை மேற்படி பத்திரிகை வெளியிட்டிருந்தது.

கதிர்காமரின் வெளிநாட்டுப் பயணங்களின் போதான செலவுகள் மற்றும் அவருடைய மனைவி சுகந்தி கதிர்காமரின் செலவுகள் போன்ற விடயங்களை எழுதியிருந்தது.

அவ்வாறு எழுதிய சில வாரங்களில் கதிர்காமர் கொல்லப்பட்டுள்ளார். இவ்வாறான விடயங்களே மேற்படி பத்திரிகைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதை உறுதியாக நம்புவதற்கான சான்றுகள் எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ச)

## போக்கு வரத்திற்கு இராணுவத்தினர் தடை

திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கான மக்களின் போக்குவரத்தையும் வாகனப்போக்குவரத்தையும் கட்டை பறிச்சான், மகிந்தபுர ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் தொடர்ந்தும் தடுத்து வருவதாக முறையிடப்பட்டுள்ளது. (ச)

## மூன்று...

இருந்த டைனமற் மற்றும் டிக்னெற்றர் ஆகியவற்றை பொலிஸாரிடம் ஒப்படைக்க வந்த போது தாம் கைது செய்யப்பட்டதாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர். (ச-4)

## விசாரணைக்...

கொலையாளிகள் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குள் பிரவேசித்துள்ளனரா என்பது குறித்து இவர்கள் ஆராயவுள்ளதாக கூறப்படுகின்றது. அமைச்சர் படுகொலை செய்யப்பட்டதையடுத்து உடனடியாக கொழும்பிற்குள் பிவேசிக்கும் இடங்கள் மற்றும் வெளியேறும் இடங்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதனால் கொலையாளிகளால் அவ்வளவு விரைவில் கொழும்பை விட்டு வெளியேறியிருக்க முடியாது.

அவர்கள் பற்றிய தகவல்களை அறியும் ஒரு முன்னோடி நடவடிக்கையாகவே புலனாய்வுப்பிரிவினர் வடக்கு கிழக்கிற்கு அனுப்பப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்ததாக இணையத்தளம் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது. (ச-4)

# மாணவர் பேரவையை தாக்குவதற்கு இராணுவம் நேற்று அதிகாலை முயற்சி

### கஜேந்திரன் எம்.பி.க.கா.குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மீது இராணுவத்தினர் நேற்று அதிகாலை தாக்க முற்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் முறையிட்டுள்ளார்.

தனது அலுவலகம் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர்பேரவைக் கட்டடத்தின் முன்புறமாக உள்ள மதிலுக்குப் பின்னால் இராணுத்தினர் சிலர் பதுங்கித்தாக்குதல் நடாத்த தயாராக இருந்துள்ளனர்.

அவ்வேளை அப்பகுதியில உள்ள நாய்கள் உரத்த குரலில் குரைக்கத் தொடங்கின. அச்சத்தத்தினை அடுத்து அங்கு தங்கியிருந்த இணைப்பாளர், எனது உதவியாளர்கள் மற்றும் மாணவர்கள் எழுந்து வந்து அலுவலகத்தினுள் இருந்தவாறு முன்பக்கத்தை பார்வையிட்டனர்.

அவ்வேளை எமது அலுவலகத்தை நோக்கி துப்பாக்கி நீட்டியவாறு இராணுவத்தினர் பதுங்கியிருந்ததை அவர்கள் கண்டனர் இச் செயலானது எனது உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதுடன் மாணவர் பேரவைக்கட்டடத்தில் தங்கியிருந்து கல்விபயிலும் மாணவர்கள் கல்வியைத் தொடரமுடியாத நிலை தோன்றியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக சர்வதே தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணனும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறையிட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பனவும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளன. (ச,து)

## அமைச்சர்...

கண்டனப்பேரணியில் மக்கள் ஈடுபட்ட னர். பொத்துவில் பிரதேச வீதிகள் எங்கும் ரயர் எரிக்கப்பட்டன,கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் வீதிகள் தோறும் கறுப்புக்கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

அமைச்சர் அதாவுல்லாவுக்கு எதிரான கொடும்பாவி ஒன்றும் எரிக்கப்பட்டது. அவருக்கெதிரான சுவரொட்டிகளும் வீதிகள் தோறும் ஒட்டப்பட்டிருந்தன.

இதேவேளை வர்த்தக நிலையங்கள் ,சந்தைகள் மூடப்பட்டிருந்ததுடன் வங்கிகள், வைத்தியசாலைகள், அரசசெயலகங்கள், நூலகங்கள் இதுபோன்ற மக்களுடைய சிவில் நடவடிக்கைகள் அனைத்தும் இயங்காத நிலையில் இப்பிரதேச அனைத்துப்பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தது. (ச-9)

## கொழும்பு சுதந்திர...

தந்திரிகள் பலர் அமைச்சரின் உத்தி யோக பூர்வ இல்லத்திற்கு விஜயம்செய்து இறுதிமரியாதை செலுத்தினார்கள்.

பூதவுடல் அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் இருந்து கொண்டு செல்வதற்கு முன்னதாக சமய நிகழ்வுகள் இடம்பெற்றன. பின்னர் அவரது இல்லத்திலிருந்து பூதவுடல் பூரண இராணுவ மரியாதையுடன் கொழும்பு சுதந்திரசதுக்கத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

அங்கு செங்கம்பள விரிப்புடன் கூடிய விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் அவரது உடல் தாங்கிய பெட்டிவைக்கப்பட்டது. பின்னர் சர்வமதத் தலைவர்களும் அவரது பூதவுடலுக்கு சமய அனுஷ்டானங்களை வழங்கினர். இறுதியில் அமைச்சரின் மகன் கலிஸ், மற்றும்மருமகன் கபிஜெயவர்த்தனவும் சிதைக்குத் தீமூட்டினர். விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் இடம்பெற்ற மரணச்சடங்கிற்கு ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஏனையபிரதியமைச்சர்கள் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இவ் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்காக இந்தியா, பாகிஸ்தான், நேபாளம்,பூட்டான்,ஜப்பான்,நோர்வே, நியூசிலாந்து, பங்காளதேஸ், மாலைதீவு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து பல அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் இராஜதந்திரிகளும் கலந்து கொண்டனர். (ச-4)

## வெளியுறவு...

அமைச்சர் ஒருவர் தெரிவித் துள்ளார்.

இதேவேளை வெளியுறவுத்துறை அமைச்சர் பதவியைப் பெற உல்லாசப் பயணத்துறை அமைச்சர் அநுராபண்டாரநாயக்கா முயன்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரசாந், சிம்ரன் நடித்த
தமிழ்
கா.நே.11.00,2.45,6.00 (பு.நே)

மனோகரா யாழ்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின அதிரடிவெளியீடாக
மாதவன், சதா, கோவை சரளா நடித்த


கா.நே: 10.30, 02.30, 6.30, 9.30

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேலு சேர்ந்து கலக்கும்
கா.நே 10.30, 02.30 06.30 09.30


வெகுவிரைவில்
ஜெய் ஆகாஷ், சிம்ரன் நடிப்பில்
கிச்சா வயது 16

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.